216

உ

குருவே துணை.

வேலலங்காரம், மயிலலங்காரம், ஆறெழுத்தலங்காரம், முருகானந்தலகிரி.

இவை

மஹான் வண்ணச்சரபம்

திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகள்

என வழங்கும்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்

அருளிச் செய்து

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

திருவாமாத்தூர்

கௌமார சபையாரநுமதி பெற்று

சென்னை

பிரம்மஸ்ரீ வை-சுந்தர ஐயரவர்களால்

தமது கேசரி அச்சுக்கூடத்திற்

பதிக்கப் பெற்றன.

க்ரோதன ௵ சிம்மரவி

குருவே துணை

இந்நூலாசிரிய சுவாமிகளது மாணாக்கரும் குமாரருமான

தி. மு. செந்திநாயகம் பிள்ளை இயற்றிய

பதிப்புப் பாயிரம்

எண்சீர் விருத்தங்கள்

உத்தமத்தமிழ்ப்பா வலர்சிகாமணியா யுரியசட்சமைய
முந்தழுவும், வித்தகச்சமையா தீதகௌமார மெய்நெறித்
தலைமைதோய்ந்திலகுஞ், சுத்தமாதவர்சேகரன்றிருப்புகழ்ப்
பேர் தோய்தண்டபாணியெங்குரவ, னித்தரையினிற்பல்
லோருநன்குறவே யியற்றுநூலினம்பலவாமால். (க)

அவற்றினுண்மேலாம் வேலலங்கார மணிதிகழ்மயி
லலங்காரங், கவற்றுதுன்பறுமா றெழுத்தலங்காரங் கவின்
முருகானந்தலகிரி, யிவற்றைநன்கன்பாற் றனதச்சுச் சாலைக்
கேற்றதொண்டென்னவுட்கொண்டு, தவப்பெரியோர்கண்
களிப்பவச்சியற்றித் தருபுருடார்த்தமோர்நான்கும். (உ)

தனக்குரியனவாப் பெற்றனன்சென்னை தன்னிடை
கேசரிப்பெயராற், கனத்தநல்லச்சி னியந்திரசாலை கவினுற

நடத்திடுங்கனிவோன்-சினத்தகைதவிர்சற் குணன்மயிலத் திற் றிருவிராமானந்தக்குரவன், மனத்துரிமையினுக் கமைந்தனேஞெசி வழங்கிடப்பெற்றவண்மையனே. (௩)

சிறந்தவேதியர்தங் குலத்தினுக்கணியாத் திகழ்தரு சோழனுட்டிடையே, யறந்தவருத்தாய் தந்தைசெய்தவத்தா லவதரித்தறுமுகக்குகனை, மறந்திடாதுருகிக் கருதுநல்லுறுதி வாய்ந்தவன்மனைவிநன்மக்க, ணிறைந்தவாழ்வுடையான் சுந் தரநாம நிலமெலாந்தொனிக்கநின்றவனே. (௪)

வேலினைக்கலப மயிலினைக்கருதி வியன்மிகுமாறெழுத் துரைத்து, மாலினைத்தவிர்த்து முருகனுனந்த மலிந்துமெய்க் கதியடைந்திடவிந், நூலினநான்கும் பெரியநற்றுணையா நோக்கவச்சிட்டுதவியவிவ், வாலியபுகழ்ச்சுந் தரன்றவர்புல வோர் மகிழ்ந்துபேசுந்தரன்மாதோ. (௫)

முற்றிற்று.

குருபாதமேகதி

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்.

உ

முருகக்கடவுடுணை

வேலலங்காரம்.

காப்பு

கட்டளைக் கலித்துறை.

பாலலங்காரத் திருமேனிநாதர் பயந்ததுடிக்
காலலங்காரச் சிறுவேழந்தன்னைக் கருதுகின்றேன்
மாலலங்கார மயிலேறிவிண்ணில் வருங்குகன்கை
வேலலங்கார மெனக்கவிநூறு விளம்புதற்கே.

நூல்

கட்டளைக் கலித்துறைகள்.

திருவருட்சத்தி வடிவானவேற்படை செந்நிறவே
ளொருவனுக்கேசொந்த மென்பாருண்டாயினு முற்றுணரும்
பருவமுள்ளார்க்கெண்ணில் வேதாகமங்கள் பகர்ந்ததெய்வத்
துருவமெல்லாமது தானுவிளங்கிடு முண்மையிதே. (க)

செயலியாவுந்தன்மய மாகியெங்கெங்குந் திகழ்ந்தசத்திக்
கயலியாதென்றுய்ந்திடிற் சாட்சியொன்றேயதை யாரறிவார்
மயலியார்க்குமீவதுந் தீர்ப்பதும்வேறில்லை வான்மலயத் [றே.
தியலியாப்புணர்த்துங் குகேசன்கைவேலென் றிறைஞ்சனன்

வேலாயுதத்தின் வடிவாய்ப்பராசத்தி வெள்விடையின்
மேலாகுவார்விழி தந்தசெவ்வேள்கையின் மேவியதாற்
பாலாழிமாலும் வெருள்சூரனுவி பதைப்பவெல்லுங்
கோலாகலப்பெருங் கீர்த்திபெற்றுனெனக் கூறன்மெய்யே. ()

கொடுங்கோலவுணர் குடரோடுசெச்சையுங் கொண்டசெவ்வே
லொடுங்கோலமாமயி லேத்தினங்கூவு மொருவனுக்குக்
கடுங்கோலக்கூற்றஞ்சுங் குன்றுதசெந்தமிழ்க் கல்விவரு
நெடுங்கோலமாந்திரு மால்புகழ்கீர்த்தி நிறைவெய்துமே. (ச)

வேதாமுற்கூறுமொ ரைவரும்பூசிப்ப மென்கமலப்
போதாதனத்திற் கொலுவீற்றிருந்த புனிதமின்னே
நாதாந்தமெய்ப்பொரு ளாங்குமரேச னலம்பொருந்தி
மீதாவிளங்கத் துணையாகினுள்வெற்றி வேலென்னவே. (ரு)

வானவர்க்குந்தெய்வ மாங்கந்தநாதன் வலிமலியுந்
தானவர்க்கோர்பெருங் கூற்றுனசேவகன் றண்ணருளாற்
கானகத்துக்குறப் பேதையைக்கும்பிடுங் கள்வனங்கை
ஞானசத்திக்கிணை யுண்டென்றிடாதுநன் னுவினமே. (சா)

கந்தரத்துக்கறை யுள்ளார்நுதற்கனற் கண்ணில்வந்த [ற்பும்
சுந்தரச்சண்முகப் பெம்மான்கைவேற்படை தொட்டொர்வெ
வெந்தரத்தாரகன் மேனியுந்தூள்பட வென்றிலனே
லந்தரத்தேவர் மனைமார்தந்தாலி யறுமுற்றுமே. (எ)

கிள்ளைப்பரியுடை யான்முன்புதோன்றுங் கிழவனுக்குக்
கொள்ளைச்சுருதிப் பொருளியாவுநல்கிக் குகனுரைக்கு [றும்
வள்ளைச்செவிகொடுத் தென்னையாரையும் வாழ்வித்தென்
வெள்ளைக்கமல மிசைவீற்றிருந்ததும் வேற்படையே. (அ)

பைந்தார்த்துழாய்முடிப் பண்ணவனெஞ்சைப் பருகியன்பர்
சிந்தாகுலங்கெடக் கண்ணருள்பெய்து செகம்புரந்து
செந்தாமரைமலர் மேல்வசிக்கின்ற திருமகளுங்
கொந்தார்கடம்புடைக் கோமான்கைவேலெனக் கூறுமினே.(௯)

அரையூடும்பாந்த ளணிவார்தம்பங்கி லமர்ந்துமகிழ்
பரையேவைவேற்படை யாய்க்கந்தவேள்கை பரிக்கநின்று
வரைநூறிவாரியை வென்றவிஞ்ஞைதங்கண் மாமறையுந்
தரையோரும்வானகத் துள்ளாருங்கூறுதல் சத்தியமே. (௰)

மித்துருவின்பரி பாலனச்சீரும் வெறுத்தெதிர்க்குஞ்
சத்துருநாசமும் வேண்டுகின்றோர்பெறத் தக்கதுணை
சித்துருவாங்குகன் செங்கையிலேந்தித் தினநடிக்க
மைத்துருவின்றி யொளிவீசும்வேலென்னும் வான்படையே.

சத்தியமென்பது வேலழகேயெனச் சாற்றுமுண்மைப்
புத்தியில்பாவல ரெவ்வகைத்தேவரைப் போற்றிடினுஞ்
சித்தியெட்டும்பொருந் தார்பின்னும்வேறொரு தேகமொடா
முத்தியும்பெற்றமை யாருரைப்பார்க்கவை முற்றுறுமே. (கஉ)

வாலாயுதக்கரத் திந்திரனுதியர் வாழுவைத்து
மாலாயுதத்தி னவமானந்தீர்த்து மடிவில்சிவன்
சூலாயுதத்தின் றுணையாய்க்குகன்கையிற் றோற்றும்வெற்றி
வேலாயுதத்துக்கு மேலாயுதமென்ன வேறில்லையே. (கங)

வேலென்றபேரொன்றை யாயுதமியாவும் விளங்குபொதுப்
பாலென்றணியினு முள்ளனவாம்பல் பருப்பதத்துங்
காலென்றதாமரைப் பூமணந்தோய்தரக் காமவெள்ளச்
சேலென்றகண்வள்ளி யோடுறுவான்படைச் சீர்ப்பெயரே. ()

பற்றில்வெந்தானவர் தம்மைவென்றும்பர்தம் பால்வளர்ந்த
நற்றிருமின்னை மணந்தோன்பின்னுளிசை நாரதன்சொற்
பெற்றிளமேனி நரைக்கோலமெய்தப் பிறங்குமங்கு
வெற்றிவைவேலொரு கோலுருவாகி விளங்கியதே. (கரு)

வீராதிவீரரு மெஞ்ஞானச் செல்வரும் வேண்டிநித்த
மாராதிக் கத்தகுந் தெய்வமொன் றேயதை யாய்ந்துரைக்கி
னோராலநீழலி னுல்வருக்குண்மை யுரைத்தபிரான்
சீரார்தவப்பய னுங்கந்த வேள்கைத் திருச்சத்தியே. (கசு)

தாமரையான்கை படையாமற் கூற்றுவன் றனெதிர்த்துத்
தோமரத்தாற்சமர் செய்யாமற் காக்குந் துணையறியாப்
பாமரச் சிந்தைப் புலவீர் கடலிற் பணைத்தெழுந்த
மாமரந்துண்டு படச்செற்றவேலை வழுத்துமினே. (கஎ)

பாலஞ்சத் தேனெல்க விண்ணூரமுதும் பழுதுபட
ஞாலங்கண் டின்புறத் தண்டமிழ்ப் பாப்பகர் நாவலர்க்குக்
காலன்றனைச் செகுத்தார் விழியாற்றருங் கந்தனங்கை
வேலன்றி வேறு துணையுளதோ கலைவெண் கொடியே. (கஅ)

முத்தாரக் கொங்கை மடவார்தம் மோகத்தின் மூழ்குறினுஞ்
செத்தாரை யொத்து மிடியாலுலகிற் றியங்கிடினு
நத்தார்க் கெமனென நல்லோர்க்குத்தாயென நாவசைக்கும்
வித்தாரமுத்தமிழ்ப் பாவாணர்போற்றல் வைவேற்றெய்வமே

எங்கட்கிகலென் றெவரெதிர்த்தாலு மிரண்டுபட்டு
மங்கப்பிளந்து மயிலோடுசூழும் வழக்கினது
வெங்கட்கருநிறப் பேயோடுகுன்றைமுன் வென்றுதமிழ்ச்
சங்கப்புலவன் சிறைநீக்கியாண்ட தனிச்சத்தியே. (உ௰)

ஒண்டைகைப்பொற்பணி யெல்லாங்களைந்திட் டுடலமெங்கும்
வெண்டைகைநீறு புனைந்தொருகோவண மேவவுடுத்
தண்டர்கண்டேங்கக் குகன்போனநாளினு மங்கையிலோர்
தண்டமுற்றுங்கதிர் வேலைவிட்டானிலைத் தஞ்சமென்றே ()

சிலையேயனைய நுதற்கவுமாரி செயுந்தவமா
நிலையேவிரும்பிச் செலுநாளங்கெய்திய நீர்நசைக்கா
வலையேற்றந்தோய்தரு மாறொன்றழைக்கு மதனிமித்த
மலையேழுமட்டதன் றோகந்தன்வேலென்னும் வான்படையே

அங்கயற்கண்ணி மகனாக்குகன்வந் தவதரித்து
மங்கலப்பாண்டிநன் னாடாளுநாளினும் வாரிதிநீர்
பொங்கவொட்டாம லடக்கிப்பொருவில் புகழ்கொடுக்கத்
துங்கவைவேலொரு நற்றுணையாகித் துலங்கியதே. (உ௩)

மைவேள்கண்டொல்கும் வனப்பார்செவ்வேடன் வலக்கரத்து
வைவேலையேதுணை யென்றெண்ணிநாடொறும் வாழ்த்துநர்
பொய்வேதனைக்கலி யண்டாதருமைப் புகழ்பொருந்து [பாற்
மெய்வேதச்சென்னியி லுள்ளபயனும் விளங்கிடுமே. (உ௪)

ஆதித்தனாதிய வொன்பதுகோளுக்கு மஞ்சிநெஞ்சம்
பேதித்துழலும் பிணக்குடையீர்நரைப் பெற்றமிவர்
சோதித்தலைவருக் காறானனத்தெந்தை தொட்டொருக்காற்
போதித்தமந்திரத் தால்வடிவேலினைப் பூசிமினே (உ௫)

குன்றங்கடோறு நடமாடுஞ்சண்முகக் கோன்கரத்தின்
மின்றங்கினாலெனத் தோற்றும்வைவேலினை வேண்டுகில்லீர்
வன்றண்டமொன்றெடுத் துப்பகடூர்ந்து மறலிவரு
மன்றங்கதனைத் தடுப்பதற்கேதுண் டுரைமின்களே. (உ௬)

பாலுண்டதென்ன வினிக்கின்றதாந்தமிழ்ப் பாடல்களான்
மாலுண்டநெஞ்சைத் திருத்தெனப்போற்றும் வலியமையார்
சேலுண்டகண்ணுடைத் தெய்வானைகேள்வன் றிருக்கைவடி
வேலுண்டெனத்தினஞ் சொன்னாலும்பாழ்த்த வினையறுமே

ஞாலங்கசந்து திருவருட்பேற்றி னசைமலிந்து
காலன்றனைத்தடிந் தார்விழியீன்றருள் கந்தனது
கோலங்கருதத் துணிந்தவென்னெஞ்சிற் குலவுசத்தி
வேலங்கையொன்றுமுற் றேன்றுங்கண்டரிது மெய்மொழியே

பட்டையக்கையுடைப் பொய்யாமொழிபகர் பாடலொன்றாற்
கெட்டைகொல்லென்றிகழ்ந் தோர்பாட்டுஞ்சூட்டுங் கிருபை
வெட்டைவெந்தீயுமிழ் பாலையிற்கோப மிகுமெயின[கொண்டு
முட்டையிற்போமன்று நங்கோன்விடாதன் முனைச்சத்தியே.

மாலொன்றுநெஞ்சந் தெளிவாகுமின்பம் வருத்தியதன்
மேலொன்றிரண்டெனத் தோற்றுதவீட்டுள் விடுப்பதற்குக்
கோலொன்றும்வில்லியர் தங்குலப்பேதை கொழுநனங்கை
வேலொன்றுமேதுணை யல்லான்மற்றியாவும்வெறுந்துணையே

அடியார்க்கெளியவ னென்றுகையொப்ப மமைத்தபிரா
னெடியான்றன்றங்கைக் களித்தகுமாரன்ற னெஞ்சணிவேல்
வடியாற் பொடித்தகுன் றெத்தனையோவென்னை வாட்டுமிந்த
மிடியானவெற்பைப் பொடியாக்குமாறு விரும்பினன்றே (நக)

நற்றிருவோங்கு மருணைபுரிக்கிள்ளை நாட்டியசெஞ்
சொற்றினம்போற்று மொருவனுக்காகவித் தொல்லுலகு
மற்றிணையின்றிய வாறோருலகு மதிக்கவன்றோர்
வெற்றிலைக்காம்பொடு வேல்போயொன்னார்களை வென்றதுவே.

அடந்தோன்றுநெஞ்சத்து மாறுரைப்பொன்னை யவனியினைக்
கடந்தோர்பிரணவத் தோடெழுத்தாறுங் கழறிவெற்பி[கும்
ணிடந்தோறும்போய்க்குகன் சேவடிவாழ்த்தி யெரியும்வெட்
விடந்தோய்த்தவேற்படைப் பூசைசெய்வாழ்வினு மேன்மை
[யின்றே. (௩௩)

பலவாம்புராண நெறிதொட்டுநின்று பணிக்குறிஞ்சி
நிலவாணன்வேற்படைப் பூசைசெய்தான்மறை நீதிமுற்று
முலவாதசண்முக மாகிக்குலாவு மொருமையுண்டாங்
கலவாதருளிற் கலக்குமெஞ்ஞானமுங் கைவருமே (௩௪)

சித்தியினாசை சிறிதுமெய்தாமற் றிருவருளை
நத்திடுமேலவர்க் காகாதமாற்ற நவின்றுமுழுப்
பத்தியையெள்ளும் படிறருக்காங்கொல் பழுதிலதா
முத்திநல்குங்குக வேள்செங்கைவேலினை முன்னுதலே.(௩௫

பாடேனென்றெள்ளுமென் பாற்பலபாடற் பகரெனவிட்
டேடேறுமாறும் புரியுங்குகேச னிருங்கவிநோ
யூடேயலைப்பது நீதிகொல்லோவவ னெண்கரத்தி
லாடேறுநாளினு நீங்காதிருக்கு மயிற்படையே. (௩௬)

கங்கையிற்றோன்றிய செவ்வேளைப்போற்றிக் கசிந்துருகிச்
சங்கையெல்லாமறத் தண்டமிழ்வாரியுந் தாண்டிமின்னார்
கொங்கையுங்கைப்பதற் காமாறுநாடிற் குறிக்குமவ
னங்கைவைவேன்மட்டு மொவ்வொருக்கால்வந் தவிர்ந்திடுமே

ஆற்பூடுபள்ளி யறையாமவனி லறமுயன்று
மேற்பூசுநீற்றுச் சிவனாரில்விண்ணிடை மேவுமவர்
காற்பூரவாகனத் தாண்முதலோர்சொற் கவியணியும்
வேற்பூசையேகுகன் பூசனையாக விரும்புநரே. (௩௮)

சொற்சுவையாது மறியார்களேனுஞ் சுரர்களுய்யப்
புற்சுனையூடுதித் தான்செங்கைவேலினைப் பூசைசெய்தா
னற்சுணங்கார்முலைப் பாரதியாளு நளிர்பொதிகைக்
கற்சுமக்கும்படி வாழ்வானுமெச்சுங் கவிசொல்வரே (௩௯)

இன்னபொருள்வரு மென்றுணராம லியம்புதமிழ்ச்
சொன்னலந்தோய்தரு பாவலராரெனிற் றுங்கவிண்ணார்
மன்னவன்மூங்கின் மரத்துருமாற்றிமுன் வாழ்வித்துளான்
றன்னடல்வேற்படை யேதுணையாமெனச் சார்பவரே. (௪௰)

முதுகுளத்தூரிடை வந்துசெவ்வேளிரு முண்டகத்தாள்
பொதுவெனத்தேறித் தமிழாற்றுதித்த புகழ்முனிவ
னதுமனமின்புறப் பல்பேயைக்கீன்றரு கானமயில்
கதுமெனவுண்ணக் கொடுத்ததன்றோகுகன் கையயிலே (௪௧)

கொள்ளைப்புலமைக் குறுமுனிகிரன் குளிரருணைக்
கிள்ளைத்தலைவன் முதலோர்சொற்சூடியுங் கிஞ்சுகவாய்
வள்ளைச்செவிமட வார்முலைப்போர்நண்ணி வாடுறுமென்
வெள்ளைக்கவியும் விழைந்ததன்முருகந்தன் வேற்படையே.

மாலையணையவர் கொண்டாடுஞ்சண்முக வானவன்கை
வேலேயுனக்கொரு விண்ணப்பமென்னை வெறுமனத்தோர்
பாலேயலைந்து தவியாமற்காத்துப் பழையதொண்டர்
போலேமகிழவைத் தென்கரத்தாற்செயும் பூசைகொள்ளே.

என்குற்றமெத்தனை யோபொறுத்தாய்முற்று மியானறிவேன்
முன்குட்டமங்கொரு வன்றீரச்செய்த முறைப்படியே
புன்குக்கலொத்தலைக் கின்றவிப்பாழ்மிடிப் புண்ணொழிப்பாய்
தன்குத்தில்வெற்புந் தவிடாகக்கண்ட தனிச்சத்தியே. (சச)

நின்புகழ்கூறுதற் கியான்வல்லனேவல்ல னீள்பொதியை
மன்புகல்வாணருக் காற்குகன்கைக்கிளி வாயுரைக்கு
மென்புரைதீர்த்தருள் வாயெனக்கூவலொன் றியானறிவே
னன்புடையார்வினைப் பேய்கெடச்சாடு மயிற்படையே. (சரு)

சேலார்விழிச்சியர் மோகாந்தகாரமுந் தீயபொருண்
மேலாகுமிச்சையு மாநிலத்தாவலும் விட்டொழித்து
நாலாவதுமுத்தி சேர்தரவேண்டி னகந்தொறும்வாழ்
கோலாகலக்குகன் வேலாயுதத்தைக் குறித்துய்மினே (சசு)

ஆடலந்தோகை மயூரத்தைக்கந்த னறுமுகத்தை
யேடலர்தாமரைப் பூப்போன்றிலங்கு மிணையடியை
நாடலனாகித் திருக்கைவைவேலொன்றை நண்ணிநின்ற
பாடலத்தூரவன் பெற்றமெய்ப்பேறு பழுதல்லவே. (சஎ)

வன்னிருதர்க்கொ ரெமனாகும்வானவர் மாதவத்தோ
ரென்னிருகூட்டத் தினர்க்குநற்றாயொக்கு மென்மனத்திற்
றுன்னிருணீக்குஞ் சுடராகுங்குன்றந் தொறுங்குலவும்
பன்னிருகைக்குக வேள்பூண்டசத்திப் படைத்தெய்வமே.

வல்லோடுறழு முலைக்கவுமாரி மகன்கரத்தி
லெல்லோனிற்றோன்றுங்கதிர்வேலைநாடொறுமெண்ணியெண்
பல்லோரறிய வருமாறும்பெற்றவர் பாருலகத் [ணிப்
தெல்லோருங்கூடி யெதிர்த்தாலும்வெல்லு மியல்பினரே(சகூ)

முந்துறுமாதிப் பெருமான்புரிந்த முறைப்பிழைக்காச்
செந்துவர்க்குன்றன்னமுன்னோன்றன்மீதுஞ்சினந்தசெவ்வே
ளிந்துறழ்வாணுதற் பேதைக்கொருகை யினிதளிக்க
வந்துறுபோதும் வடிவேற்படையை மறந்திலனே (ரு௰)

கோலின்றியேகுங் குருடரொவ்வாது குரவனது
காலின்றிருப்பணி யாலுரைகேட்டுக் கருணைமுற்றி
மாலின்றியமனத் தோராயிடினும் வயங்குகதிர்
வேலின்றிக்கந்தனைப் பூசைசெய்தாற்பயன் வீண்படுமே (ருக)

பாகினிப்பொஞ்சு மொழியாரனேகர் பரிந்துருகு
மோகியராக மயின்மீதுலாவு முருகப்பிரான்
வாகிடைதோன்றும் வடிவேன்மகிமை மனநிலைத்த
யோகியர்தாமறி வார்மற்றையோர்க ளுணர்வரிதே (ருஉ)

பெண்மைத்திருவுருப் பாதியுள்ளார்மிகப் பேணிச்செய்த
வண்மைத் தவப்பய னுவந்தசேந்தன் வலக்கரத்தி
னுண்மைக் கதிரயி லேயுன்னைநாடி யுருகுமென்னை
வெண்மைக் கருத்துடை யாரிகழாதின்று வென்றருளே (ருங)

வேடப்பிரானெனச் சென்றங்குபோர்செய்து வில்விசையன்
சாடப்பகழி யளித்தோன்புதல்வன் றடங்கைவைவேற்
போடப்பொடிந்த மலைபோலுந்தீவினை போயொழிந்தா
லாடப்படுஞ்சித் தறுபத்துநாலு மமைதருமே (ருச)

கந்தக்கடம்ப னெடுந்தோளிற்றோயுங் கதிரயிலே
பந்தக்கடல்சுவ றச்செய்யுமென்னப் பணிந்திறைஞ்சார்
சந்தக்கவிதைப் புலவோர்களாயினுஞ் சாந்தினத்தின்
மந்தப்பகடிடை யான்றனைக்காணும் வருத்தமுண்டே (ருரு)

வானுடர்மங்கை மணவாளன்றுங்க மயிலில்வந்து [மன்ப
போனெனென்றோதிடும் பொய்யர்பின்போய்த்தினம் போற்று
ரானோர்க்குமன்னவன் கைவேற்றுணையுண் டறிந்துய்மினோ
மேனாட்டவப்பய னுலரசாண்டுறும் வேந்தர்களே. (ருசு)

கோலத்தினைப்புனத் தின்பரண் மீது குயிலெனவாழ்
வாலப்பருவக் குறத்திகண்போன்று வயங்குறும்வேற்
சாலப்பருத்த புயமீதணியுஞ் சரவணவேள்
போலத்திருவுருப் பெற்றோருமெண்ணில் புலவருண்டே (ருஎ)

கந்தன் கருணை மிகையாற்றனது கழல்பணியுஞ்
சொந்தம்பெறுமவர் தன்னுருவாகத் தொடுந்தொறும்வே
லந்தண்புயத்துக் கமைவானவேலோன் றளிக்குங்கண்டீர்
மந்தம்பொருந்து மதியுடையாரிதை வம்பென்பரே. (ருஅ)

சென்னியிற்பீலி யணிந்துற்றமாயன் செனிக்குமுன்னந்
தன்னிகலாகிய மாமனைக்கொன்றது சத்திகொண்டே
யென்னிலன்னோன்குகன் றொண்டனென்றோதி லிசையுமன்றோ
முன்னிந்தஞாயத்தை யேனோவியாசன்மொழிந்திலனே (ருக)

காணுமற்காணுங் கனவுநனவுங் கலந்தொளிரு
மாணுருமுண்மை யநுபூதிஞானம் வருத்துந்தெய்வஞ்
சேணுடர்போற்றச் சிகரிகடோறுந் தினநடிப்போன்
றோணின்கிலொன்று சுமக்கின்றவேலென்கை சூதல்லவே ()

கள்ளக்குறவர் புனத்தேயிருந்த கரியமங்கை
வள்ளத்தனங்கண் டுருகும்பிரான்கையில் வாய்ந்தவைவே
லெள்ளத்தனையு மிரங்காததேயொத் திருக்கும்பின்னுள்
கொள்ளற்கரியன வெல்லாங்கணத்திற் கொடுக்குமன்றே(சுக)

வண்டமிழ்ப்பாண்டிநன் னாட்டினதாந்திரு மந்திரத்தூர்த்
தொண்டனன்றோதிய பாடலொன்றாலங்கு தூயகண்ணாற்
கண்டவர்நெஞ்சங் கலங்கப்புளியின் கனத்தகிளைத்
துண்டதுவீழ்த்தவுஞ் செவ்வேள்கைவேற்படை தொட்டதுண்டே ()

காமக்கலவிக் கடலூடுழன்று கவலுநெஞ்சைச்
சேமப்படுத்தும் வகையறியேனருட் சித்திநல்கித்
தாமக்குழலியர்க் கேங்காதுதாங்குந் ததியிதுகா
ணீமப்பிரான்மகன் றன்கரத்தேதாங்கு மெழிற்சத்தியே (கூ௩)

வண்டுண்டசோலை யருணைபுரிக்கிள்ளை மாதரின்ப
முண்டுண்டயரினு மியான்மறவேனென் றுரைத்தபொருள்
பண்டுண்டதுன்பக் கடனீந்துந்தேவர் பரிந்துசெய்யுந்
தொண்டுண்டதாட்குகன் வேலேயென்றோர்ந்து தொழுகைநன்றே. ()

கற்பனைதேடிப் பலவாறுபாடுங் கவியிடத்தோ
சொற்பனத்தூடு மறவாதுபோற்றுந் துதியினிலோ
நிற்பதுன்னாசை யறிகின்றிலேனுண்மை நீயுரைப்பாய்
வெற்பனந்தத்துறை வான்கையிலேந்திய வேற்படையே (கூ௫)

ஒன்பதுவீரர் முதலோரனேகருக் கொவ்வொருவே
லன்பதனாற்பெற்று நல்கியதாயெதென் றாய்ந்துரைக்கிற்
பொன்பழுகுந்திரு மார்பத்தினான்றங்கை புத்திரனா
யின்பவினோதம் புரிகந்தவேள்கையி னெஃகமொன்றே (கூ௬)

ஆடாதியாவன வெல்லாங்கொன் றுண்ணு மவரையது
கூடாதெனத்திருத் தற்கொருவீரன் குவலயத்துத்
தாடாளனாகி வரவேண்டுமன்னவன் றன்கரத்திற்
பீடார்வைவேலு முறவேண்டுமென்பதென் பேரிட்டமே(௯௭)

எந்தச்சமயத் தெவனேனுமெஃக மெடுத்திகலோர்
சிந்தப்பொருது மயிலேறிவிண்ணிற் றிரியிலவ
னந்தக்குமர குருநாதனேயென் றறியுமறி
விந்தப்பிறவியிற் றானெனதாருயிர்க் கெய்தியதே. (௯௮)

இன்னம்பிறந்து பரதவியாம லிகதலத்தின்
முன்னம்பிறந்த மறைத்தெய்வமியாவு முருகனென்றோர்ந்
தன்னம்பிறர்க்கிட்டு வேற்பூசையேதவ மாமுயன்றோர்
சொன்னம்பிறந்தொழி யேனெஞ்சமேயருட் சூழ்ச்சிகொண்டே (௯௯)

எல்லாவிரதத்து மேலானநோன்பெனக் கெவ்விதத்துங்
கொல்லாவிரதமொன் றேயெனத்தேறுங் குறியுணர்த்தி
வல்லாண்மைச்சித்தியின் பேராசைதன்னை வளர்த்தெய்வங்
கல்லாடல்வேண்டுங் கழற்றம்பிரான்றிருக் கைச்சத்தியே ()

நல்வாஞ்சையாலுயிர்க் கெல்லாமிதஞ்செய்து நானிலத்திற்
கொல்வார்தங்கூற்றென வாழ்கவுமாரர் குரூரமுற்றுப்
புல்வார்த்தையான்மிக நிந்தைசெய்தாலும் பொறுப்பதன்றோ
வில்வாய்ந்தசீர்நுதற்றெய்வானைகோன்செங்கைவேற் குணமே

ஓசைத்தமிழ்நயர் தேருதமுடன் ருழைத்தபொருட்
காசைப்படுந்துயர் தீர்த்தனையேயுன்னை யாதரிக்கும்
பூசைத்தவமுயன் றென்றுங்கெடாத புகழ்புனைவேன்
காசைத்துணர்நிகர் வள்ளிமின்கேள்வன் கரத்தயிலே (எஉ)

சேதாம்பல்வாய்விண்டு செவ்வேளென்பாலன்று செப்பியசொற்
சூதாமென்றெண்ணவு மஞ்சுகின்றேனவன் சொன்னபடி
யாதாரமெய்தியும் வாழ்கின்றிலேனெவ்வ ணுங்கொளுண்மை
நீதானறிவையன் றேவவனேந்து நெடுஞ்சத்தியே (எ௩)

கண்டமனேகம் படுமாறுநண்ணுங் கருத்தினவர்
கொண்டசில்பேறுங் கிடையாமலேங்கிக் குலைகுலைந்தேன்
றொண்டர்களுடனைக் கூட்டலென்றேகுகன் றோளிலிருந்
தண்டரைக்காக்கு மயிலேயென்னுருயிர்க் காந்துணையே.(எச)

நீயென்னையாண்டது நானுன்னையேநம்பி நின்றதுவுஞ்
சீயென்றுலக மிகழ்வதற்கோவிது தீர்த்ததற்கோர்
தாயென்றிலகத் தயைபுரிவாய்சிவன் றன்விழியிற்
சேயென்றுதித்தபி ரான்கையிலேறித் திகழ்சத்தியே. (எரு)

துண்டரிகப்புத்தி யுள்ளார்சிலரன்று சூழ்ந்துநின்று
விண்டசொற்கஞ்சி விலகாத்தொழும்பன் விரைந்துரைத்த
வெண்டமிழ்கேட்டு மணிநாவறக்கொய்து வீழ்த்தியது
சண்டனைக்கொன்றபி ரான்மகனேந்திய சத்தியதே. (எசு)

மின்னேவனற்கொழுந் தோதுணையாதும் விளம்பரிய
பொன்னேவருண்மய மோபலவாகப் புகல்படைக்கோர்
மன்னேவவுணர் முதலோரைக்காயு மறலிகொல்லோ
வென்னேவறிகின்றி லேன்கந்தவேள்கையி லேந்தியதே.

அயலாகவைத்துனைப் போற்றப்புகினுமென் னுசையுன்றன்
செயலோதித்தோத்திரஞ் செய்வதற்கேயெழுஞ் சீலமதா
லியல்வாஞ்சைகாட்டியநீயேன்பல்வாறென்னை யேங்கவிட்டாய்
கயல்போலுங்கண்ணுமை கைப்பாலனுரிளங் கைப்படையே.

கேரளநாட்டி லுறும்போதுனதுட் கிருபைமலி
நீரவண்காட்டியு மிந்நாளளவினு நீயிரங்கிப்
பாரவர்காண விளையாடலொன்றும் பயின்றிலையே
காரணதேசிக னுங்கந்தவேள்கைக் கதிர்ச்சத்தியே. (எகூ)

சிங்களந்தன்னின் மரக்கலமேற்கொண்டு சென்றவன்று
மங்கடியேன்மனஞ் சாட்சியதாவந் தவிர்ந்துளநீ
யிங்கருளாற்குறை தீராதிருப்ப தியல்புகொல்லோ
சங்கரன்செய்து குகவேட்களித்த தனிப்படையே. (அ0)

உன்றன்கருணையை நான்முழுதோர்ந்தில னுன்னைநம்பு
மென்றன் பிரியமெல் லாமறிவாயென் றிரங்குவையோ
குன்றன்னதோளினர் பல்லோர்பகையுங் கொடுத்தனையே
மன்றன்மதிச்சடை யார்மகன்மார்பில் வளர்சத்தியே. (அக)

குஞ்சரமாமுகத் தண்ணல்பிற்ஞேன்றுங் குகன்மகிழ்வுற்
றஞ்சலென்றன்றெடுத் திட்டகைதாங்கு மயிற்படையே
நெஞ்சறியக்கொள்ளு மிச்சையெல்லாந்தந்து நீக்கினன்றிக்
கொஞ்சமும்வீட்டை மதியேனெனுது குறிப்பிதுவே. (அஉ)

தென்பூமிவாழப் பொருநைமுன்னீந்தவன் சிந்தையின்பே
ரன்பூர்செந்தாமரைத் தாட்குகனேந்து மயிற்றெய்வமே
யென்பூனருந்துங் கொடியோரிகழு மிகழ்ச்சியஞ்சி
யுன்பூசையாசை வெறுத்ததுண்டோநன் குணர்ந்துரையே

திண்ணியநெஞ்சின ரேயுணர்சீர்திகழ் சேய்புயத்தி
னண்ணியவேல்வடி வாந்தெய்வமேயுன்னை நாளுநம்பி
யெண்ணில்பல்கோடி மலராலருச்சிக்கு மென்னிழிவும்
புண்ணியக்கீர்த்தியு முன்றனக்கேயிது பொய்யல்லவே. (அச)

சலிக்கின்றநெஞ்சொடு பாடிமைடமை தமிழ்விழைந்தாய்
கலிக்கின்றபேருவப் பால்வனேந்தேத்துங் கவியணிவா
யொலிக்கின்றவார்கழற் ருட்குகவேள்கரத்துற்றுமிகச்
சொலிக்கின்றவேற்றெய்வ மேயெண்ணுமாறு துணைச்செய்திடே ()

மயிலேறித்தேவர் பலர்சூழச்சென்று வருங்குகன்கை
யயிலேயுனைத்தினம் போற்றியுந்தீவினை யச்சமின்றி
வெயிலேயெனச்சுடு கின்றதந்தோவெல்லும் வென்றிநல்கிப்
பயிலேழ் நெறிக்கும் பொதுவாவிளக்கிடப் பண்ணுதியே.

கம்புகும்பத்தந்தி மாமுகத்தாதிக் கணபதிபின்
செம்பவளக்குன்ற மேயெனத் தோன்றெழிற் சேயணிவே
லும்பருக்கேதஞ்ச மென்னவொண்ணுதிவ் வுலகினித்தந்
தம்பமென்றெண்ணுநர்க் குந்துணையாகுஞ் சரதமிதே (௮௭)

கட்டாரியன்னகண் ணார்மையலேயிற் கலங்கிமதி
கெட்டாரிற்சீரிய நாயேனுக்குண்மை கிளத்தியும்பின்
னெட்டாரஞ்செய்யு முருகோன்கைவேற்படை யொன்றைமட்டு
நட்டார்களுய்ந்த கதைகோடியுண்டிந்த நானிலத்தே. (௮௮)

தெய்வத்திருவரு ளேதஞ்சமென்னத் தெளிந்து நின்றுஞ்
சைவத்தொடோதுஞ் சமயங்களாறுஞ் சமமெனத்தேர்
மெய்வைத்தபோதமுற் றுங்கந்தவேடன் விறற்புயத்து
நெய்வற்றிடாவடி வேற்பூசையாசை நிலைத்துற்றதே. (௮௯)

நன்றுண்டநெஞ்சின ரெல்லோரும்வாடுற நற்பசுவின்
கன்றுண்டுமேனி வளர்ப்பாருவக்குமிக் காலத்தினீ
நின்றுண்டரீகத்தைக் காட்டா திருக்கைநன் னீதிகொல்லோ
குன்றுண்டுவாரியுண் டெங்கோன்காத்திற் குலாவயிலே (௯௰)

மனைக்கும்பொருட்கு மலந்தலைந்தாலு மழைமுகில்போற்
கனைக்கும்பகடுடைக் கூற்றனண்டாவிதங் காதலித்து
நினைக்குங்கருத்துடை யீர்குகன்றீயர் நிணக்குழம்பி
னனைக்குந்திருக்கைவை வேலொன்றையேமிக நாடுமினே.

செங்கட்புலியன்ன தீயோருக்கஞ்சித் தியங்குமென்னை
யங்கட்புவனியெல் லாந்தொழும்வாழ்வி லமைப்பதென்றோ
திங்கட்குடையுடை யான்கண்டுநாணுந் திருக்குமரன்
வெங்கட்டகுவர்தம் மேல்விடப்போய்வெல்லும் வேற்றெய்வமே. (கஉ).

இடியேறொத்தார்க்கின்ற செந்தகரேறு மிளங்குகன்பால்
வடியேய்ந்தவேல்வடி வாந்தெய்வமேகும்ப மாமுனிநேர்
பொடியேறுமேனிக் கவுமாரர்தம்பதம் போற்றிநம்பு
மடியேனுமென்ற னடியாருமுன்ற னடைக்கலமே. (கா)

முன்னாளும்பொரு பெண்ணைவூரிலென்முன்னொருசொற்
சொன்னயதெண்ணி மகிழ்ந்திருந்தேனென் றுயர்களைந்து
நன்னாகரீகமிந் நாள்வரையீந்திலை ஞாயங்கொலோ
மின்னாணும்வேல்வடி வாய்க்குகனேந்த மிளிர்தெய்வமே. ()

அன்றொருக்காற்சொன்ன வாறொன்றுநல்கினை யாசைமுற்று
மென்றொருங்கீவைகொல்லோவறியேன்விண்ணிலிந்திரர்க்கா
வன்றொழிற்றானவர் வேரறக்கீன்று மலைத்தலையி
னின்றொளிர்வான்கையி னீங்காதெந்நாளு நிகழ்சத்தியே. ()

எவ்வழித்தொண்டர்க ளெவ்வாறுசொல்லினு மென்னளவு
மிவ்வகிலத்துள்ள தெய்வங்களியாவுமென்னிச்சைமிஞ்சுஞ்
செவ்வடிவக்குக னுங்குறக்கோதையுந் தெய்வமின்னு
மௌவலந்தீவிலென் பூசனைக்காவரு ஞாங்கரதே. (கசு)

என்னைப்படுத்துங் கருங்கற்கிணற்றிடை யிடில்கங்கை
மின்னைக்கணத்தில் வருவிக்கவேண்டுமிம் மேதினியி
லுன்னைத்துணைக்கொண்டு குன்றங்கடோறு முலாவுநலந்
தன்னைக்கொடுக்கவும் வேண்டுமெங்கோன்கைத் தனிச்சத்தியே. (கூஎ)

ஆசிக்குந்தொண்டர் பலபேர் நெருங்கிட வைங்கருவி
யோசிக்கும்பந்தர் நடுவானவேதிகை யொன்றிலுன்னை
வாசிக்கும்பன்மலர் தூவிப்பராவி வணங்கிநித்தம்
பூசிக்குஞ்செல்வந் தருவாய்செவ்வேள்கை புனைசத்தியே. ()

எந்தவடிவு மெடுக்கின்றயோகத் தியல்புணர்த்தி
மந்தரும்போற்றிக் களிகூருஞ்சற்குரு வாழ்க்கைநல்கிச்
சிந்தனையாவுஞ் சிதையாமலாடுந் திறல்விளைக்குங்
கந்தனங்கைத்தொகை யூடொன்றில்வாழுங் கவின்சத்தியே

தூணிப்பதக்கென்கை யாறுகுருணித் தொகையெனத்தேர்ந்
தாணிப்பசும்பொ னிகராவிளங்கு மறிவினராய்
வேணிப்பரமன் றவமாமுருகன்கை வேற்படையைப்
பேணிப்பரவும் பெரியோர்க்குப்பின்னைப் பிறப்பில்லையே. (ங)

முற்றிற்று.

நூற்பயன்

காரணசற்குரு வாங்குகன்வேலலங் காரமுற்றும்
பூரணமாகத் தினந்தோறும்போற்றும் புனிதருக்கு
நாரணனுமெனப் பூதலங்காத்துவிண் ணாட்டினிடை
வாரணங்கொன்றுரித் தாரெனவாழ்பெரு வாழ்வெய்துமே.

தெய்வமே துணை.

உ

முருகக்கடவுடுணை.

மயிலலங்காரம்.

காப்பு.

மயிலலங்காரம் பொடியாக நக்கவ ரின்னருளாற்
குயிலலங்காரப் பரையீன்றவேழத்தைக் கும்பிடுவே
னயிலலங்காரத் திருமார்பச் சேந்தனுக் கார்வநல்கு
மயிலலங்காரத் தமிழ்க்கவி நூறும் வருவிக்கவே.

நூல்.

கட்டளைக் கலித்துறைகள்.

ஓங்கார வட்டம தேமயிலாகி யுலகமெங்கு
நீங்காதுநின்ற பரமாங்குகனை நிதஞ்சுமக்கும்
பாங்காரறியவல் லாரோவவர்தம் பதத்துகட்கே
யாங்காத லுற்றுழைக் கின்றேமுக் காலு மிதுநிசமே. (க)

கண்ணுடையாரின் மயில்வாகனத்தின் கவின்கொடிதென்
றெண்ணுநரில்லை யிருந்தாலவருக் கிருள்பகலாம்
விண்ணுறுஞ்செங்கதி ரோன்கறுப்பாங்கடல் வெற்றிடமாந்
தண்ணுடைத்திங்கள் பனிநீரெரியுந் தழலொக்குமே. (உ)

கமலமுற்றென்று நிருவாணமாஞ்சினன் காதல்கொள்ளுஞ்
சமணரும்பீலியைத் தந்தவஞ்சீர்பெறத் தாங்கலுண்டே
லமலமெஞ்ஞானச் சதுர்வேதத் தோர்களி லாரிகழ்வார்
குமரனைவேலொடு கொண்டாடுமாமயிற் கோலத்தையே.

ஆண்குறியின்றொலி கொய்துகொன்றேதின் றகங்களிக்கும்
வீண்குண வாதரும் பீலியைக்காண்டொறு மெய்சிலிர்த்து
மாண்குருவின்பொரு ளென்றேத்துவாரெனின் மற்றெவர்தா
மேண்குகனேறு மயில்வாகனத்தை யிகழ்பவரே. (ச)

தண்ணளியாற்புவிக் காநலஞ்செய்த தலைவர்களிற்
கண்ணனுெப்பாரின்மை யாமுண்மையோதிற் கதிரயிலால்
விண்ணவரூர்புரந் தான்மயிற்பீலியின் வீறுணர்ந்து
வண்ணமென்சூழியத் தேதினஞ்சூடிய வண்மையுற்றே. (ரு)

பாராதி யாநிகழ் பூதங்களைந்தும் பரிந்துதவுஞ்
சீரார்குடிலை வடிவேமயிலெனத் தேர்ந்துகொண்டா
லோராறுசென்னி முருகோனல்லாற்பர மொன்றிலையென்
றாராதிக்கின்றமெஞ் ஞானநுபூதி யவிர்தருமே.

நீலகண்டங்கொண்டு பல்பாம்பணிந்து நிருத்தமுஞ்செய்
தாலமுந்தின்று குகனேறுஞ்சீரு மமையுமயிற்
கோலமுஞ்சங்கரன் சீருமொன்றேயெனக் கூறறியார்
ஞாலமெல்லாம்புகழ் பாவாணரேனு நலமிலரே. (எ)

மயில்போலுஞ்சாய லுடையாளிமாசல மங்கையென்னம்
பயில்வார்சொற்கொல்கி யவளதன்கோலம் பரித்துமுன்னூ
ளெயில்வேவச்சுட்டவற் பூசித்தகாதையோன் றிவ்வுலகிற்
றெயில்வாய்ந்ததோண்மச்ச கந்ததன்பாலகன் சொற்றுளனே. (அ)

தலைமேற்கலாப நிலாவிடப்பாம்பிற் றனிநடித்து
விலைதீர்ந்தபச்சை மரகதம்போன்று விளங்குநலந்
தொலையாப்பெரும்புகழ்க் காகுத்தனுக்குமித் தொல்புவியின்
மலைதோறுமாடும் பிரான்றனைத்தாங்கு மயிற்குமுண்டே.

காராகுவூருங் கணநாதன்சிற்சில காலமன்பாற்
சேரார்மயிற்பரி மீதேறிவானிற் றிரிந்ததுண்டு
கூரார்ந்தவேன்முரு கோன்பெருச்சாளியிற் கோலமஞ்ஞை
யாராமையெய்த வொருக்காலுமேறி யவிர்ந்ததின்றே. (௰)

செச்சையுங்கூதள மும்புனைதோட்குகன் சீர்ச்சிகிமீ
திச்சையுற்றுத்தனக் கெய்தாமைக்கேங்கி யிரவியென்பான்
கொச்சையஞ்சாமற்ற ஞோராழித்தேரின் குதிரைகட்கும்
பச்சைநிறமுஞ் சிறகுமுண்டாகிடப் பண்ணினனே. (௰க)

மேருவைச்சூழ்கைக் கறுபதுநாழிகை வேண்டுமெல்லோன்
றேருறும்வாம்பரி யேழுக்குமெவ்வகைத் தேவர்களுஞ்
சாருநன்மேனிக் குமரேசனேறுந் தனிமயிற்கிப்
பாருலகத்தனை யுஞ்சுற்றவோர்கணம் பற்றுமன்றே. (௰உ)

செவ்வொருங்கெய்துந் திருமேனிச்சேந்தன் றிறற்காத்திற்
றெவ்வொருங்குண்டுண்டு சேர்வேலொடேறுஞ் சிகிப்பரிமேல்
வௌவொருநற்குடை யேபோல்விரிந்து வளைகலபத்
தொவ்வொருகண்களும் வெய்யோன்கண்டொல்கு மொளியினவே. ()

அத்தனையாண்டபி ரான்மயிற்றோகையி னக்கமெண்ணி
யித்தனையென்னத் தெரியவல்லார்செத்த விந்திரரு
முத்தனையாண்மண வாளருங்காக்கு முகுந்தர்களு
மெத்தனைபேரெனக் கேட்டாலுஞ்சொல்லு மியல்பினரே. ()

வெயிலாருமென்புழுப் போன்றெய்த்தவிந்திரன் மேதகுசீர்
மயிலாகிக்கந்தனைத் தாங்கியதால்வந்த வண்மையன்றோ
வொயிலார்சசிமுலைப்போகமும்வெண்ணிறத்தும்ப லும்பொன்
னெயிலார்விண்ணூருநற் கற்பகநீழ லிருக்கையுமே. (௰௫)

பொன்னூரிற்றேவரை மாலோடுவென்ற புகழ்க்கலுழன்
மூன்னூறுபட்டிறந் துண்டாக வெங்கண் முருகப்பிரான்
றன்னூர்தி யாமயிலுண்டுமிழ்ந்திட்ட சரித்திரமுந்
தொன்னூல்வியாச முனிவோன்றன் வாய்கொண்டு சொற்றதுண்டே.

எல்லாப்பதாகைக்கு மேலாங்கொடியி லிருந்துமறை
வல்லான்றனன்னத்தை யுண்டுமிழ்ந்தெல்லவன் வந்துலகின்
பொல்லாங்கொழிக்கத் தினங்கூவுஞ்சேவலும் பொற்பிலுய
ருல்லாசக்கந்தன் மயில்வாகனத்தி னுடன்பிறப்பே. (௰௭)

அயில்வைத்தகைப்பெரு மான்றொண்டர்கூட்ட மணிக்கலபத்
தொயின்மெச்சலோர்வியப் பன்றன்று வேதமு மொண்புவியும்
பயில்பற்பல்சீவரு மற்றியாவுநல்கப் படுபொருளோர்
மயின்முட்டைபோலுமென்பாரெண்ணில்கோடிமதத்தருமே.

எவ்வகைத்தேவரு மேறும்பல்வாகனத் தின்பெருக்குந்
தெவ்வடுங்கொற்றவை வேற்கந்தநாதன் சிகியினைக்கண்
டிவ்வழகென்கொ லெனநாணுமுண்மையை யாதிடத்தும்
வெவ்வபிமானமில் லாரன்றியாவர் விளம்புநரே. (௰௯)

உட்சிக்கிலாதவர் போற்றுங்குகேச னுகைக்குமயிற்
புட்சித்திரத்தினைக் கண்டுகண்டேங்கிப் புவனியெல்லாங்
குட்சிக்குள்வைக்கு நெடுமாயனேறுங் குலக்கருடன்
பட்சிக்கரசெனத் தான்வாழும்வாழ்வைப் பழிக்குமன்றே.

கொள்ளைக்கவினுறும் வேளதென்றேதொரு கொள்கையொத்தும்
வள்ளைச்செவிக்குறப் பேதைதன்கேள்வன் மயில்வலியும்
வெள்ளைப்பொறிமுதற் பல்சீருங்கூத்தும் விரும்பிமதன்
கிள்ளைப்பரியும் பலவாறுநாளுங் கிலேசிக்குமே. (௨௧)

பொன்னம்பொருப்பரு கேகந்தவேண்மயில் போயததன்
முன்னங்குநான்முகன் விட்டவெள்ளோதிம முற்றும்பச்சை
வன்னம்பொலிந்த தவன்றேடியோடி வருந்திநின்றிட்
டென்னன்பர்நாவினும் வாழ்வாளுணர்த்த விவர்ந்தனனே.

கூரியவேற்குக வேண்மயிற்சீரையுங் கோள்படுதா
ஞூரிழிகாக்கையின் கோரத்தையுங்கண் டுளமெலிந்து
சூரியன்சேய்மந்த னுகிமுடப்பட்டுத் தொல்புவியுங்
கீரியென்னக்கலை பூணுண்டியோடுங் கறுத்தனனே. (உ௩)

குகனைப்புலவர் மகளோடுங்கானக் குறத்தியொடுந்
திகழ்சத்திவேலொடுந் தாங்கியெங்கெங்குந் திரியுமயி
லகவற்றொனியொன் றிசைத்தாற்பல்லாயிரமண்டத்துள்ளு
நிகழ்வுற்றபாம்பின மெல்லாம்பயந்து நிலைகெடுமே. (உச)

வேலிற்புணர்ந்ததிண்டோட்குகன்வேண்டலின்மிக்கபொருள்
பாலிற்பெருகுங் கடன்மீதெந்நாளும் படிக்குநெடு
மாலிற்கணையுரு வாய்ப்புவிதாங்கிய மாசுணத்தைக்
காலிற்சிறுதண்டை யாப்புனைந்தாடிடுங் கார்மயிலே. (உரு)

மூவலில்வேலொடுந் தெய்வானையோடு முருடர்புனக்
காவன்மின்னோடுங் கிளியோடுஞ்சண்முகக் கந்தனொடு
மாவனமற்றவற் றோடுஞ்சுமக்க வமையுமொரு
சேவலைத்துங்க மயிலோடொப்பாமெனச் செப்பலென்னே.

பயில்வேதமாகம மெல்லாந்துதிக்கப் பருப்பதந்தோ
றயில்வேலுந்தண்டமுங் கைக்கொண்டுலாவு மருட்குருவைக்
குயில்போலும்வேடிச்சி யோடோர்கணவின்முன் கொண்டுவந்த
மயில்வாகனத்தை மறவாதெந்நாளுமென் வஞ்சநெஞ்சே.

சினவிற்புருவத் துணைக்குறப்பேதையைத் தெண்டனிட்டின்
சொனவிற்றும்வாயுடைச் சுந்தரவேடனைத் தூங்குறுமென்
கனவிற்கொணர்ந்த படியேபகலெனுங் காலத்திலோர்
நனவிற்கொடுவர நாட்செல்லுமோமயி லுயகமே. (உஅ)

கருணையென்மீதொரு சற்றுனக்குண்டெனிற் கந்தனைமுன்
னருணையிற்பாவலன் கண்டதுபோற்கண் டகங்குளிர்ந்து
தருணமிதென்றழும் பார்மகட்கான தருமமுஞ்செய்
திருணலிந்தின்புறு வேனல்லவோநல் லெழிற்சிகியே. (உசு)

வண்ணப்புலமையுந் தந்தசெவ்வேள்பல வம்பர்செம்பொன்
னண்ணப்படுத்தனின் சம்மதமோவென் னவையனந்த
மெண்ணப்படாதன வானுலுநீயின் றிரங்கிச்சற்றே
விண்ணப்பஞ்செய்யவொண் ணாதோகலாப வியன்மயிலே. ()

அம்பிகையாற்றடைப் பட்டசெவ்வேல னருணையிடை
நம்பியதொண்ட னெதிர்தோன்றச்செய்தநின் னன்மனமென்
கம்பிதச்சிந்தை களிகூருமாறு கருதலென்றே
வம்பியல்கொங்கை மடவார்கண்டொல்க வருமயிலே. (௩௧)

அந்நாளருணைப் புலவோன்சொல்பாட லதற்கிரங்கி
முந்நான்குசெங்கை முருகோனைக்காட்டினை முற்றுநம்பு
மிந்நாளென்சொற்புனைந் தாலிழிவாகுமென் றெள்ளுவையோ
மைந்நாகவெற்புமனநாணத்தோன்றுமயிற்றெய்வமே. (௩௨)

கண்பாவுதோகை மயிலேயடிமை கருதிச்சொல்லு
மொண்பாவையீனமென் றெள்ளவொண்ணாதுன் னுளமறியும்
வெண்பாவைநெஞ்ச மறியும்பொதியை வியன்றமிழ்க்கோன்
றிண்பாவுசிந்தை யறியுமந்தோமிகத் தித்திப்பதே. (௩௩)

வாரம்வைத்தன் றருணைபுரிக்கோபுர வாயில்வடக்
கோரமுற்றானைப் புரந்தாயெனக்கு மொருசிறிதுள்
ளீரமுற்றுக்கதிர் வேற்குகன்சேவையின் றெய்தச்செய்வாய்
பாரபட்சஞ்சற்றும் வேண்டாங்கலாபப் பசுமயிலே. (௩௪)

என்னைத்திருப்புகழ்க் கின்னையென்றோதி யியன்றதவந்
தன்னைத்தளர்த்தின னின்மீதிவருஞ் சரவணனோ
மின்னைப்பொருமயிற் றோனுடைத்தானவன் வேறுளனோ
பொன்னைப்பழிக்கு மயிலேமெய்யோர்ந்து புகலுதியே. (௩௫)

பேயொன்றுவந்து பிடித்தடைத்திட்ட பெருந்துயரால்
வாயொன்றுபைந்தமிழ்ப் பாவனைந்தானையும் வாழ்வித்தவே
ணாயொன்றுபோனம்பு மென்றுதியேற்று நலஞ்செய்கிலா
னீயொன்றுமோர்ந்திலை யோவவனேறு நெடுஞ்சிகியே. (௩௬)

பல்கால்கனவினிற் பாடெனப்போய்க்குகன் பன்னிப்பன்னிச்
சொல்காலந்தோறு மிகழ்ந்தபொய்யாமொழி துண்ணெனப்போய்
வெல்காலவன்றுணை யாச்சென்றநீயென்னை வேண்டிலையே
கொல்காலனெல்குபற் பாம்பணிபூண்ட குலமயிலே. (௩௭)

பாலையின்முட்டைப் பெயர்வேடனாகிப் பதிற்கவியக்
காலையிற்பாடிக் குகன்பூண்டபாட்டினுங் கையெழுதும்
வேலையிற்காய்ப்பத் தமியேன்பல்பாடல் விளம்பல்வம்போ
மேலைவிண்ணூர்க்குமப் பாற்செலுந்தோகை மிளிர்மஞ்ஞையே

என்பாடலேயென யான்பாடும்பாத்தொகை யாவையுஞ்சேய்
தன்பாடலேயெனச் சாற்றுகின்றானந்தத் தன்மைகொண்டே
யன்பார்தியாகமு மீகின்றிலானென்னை யாதரிப்பாய்
கொன்பாவும்வேலொ டவனேறுந்தோகைக் குரகதமே.(௩௯)

ஒருபாவையன்று முருகாவென்றோது முறையினிலுஞ்
சொருபாநுபூதி யொருவாறுணர்ந்துசெஞ் சொற்றமிழாற்
றருபாடலியாவும் பழுதுகொல்லோவிங்கென் றன்னளவுங்
கிருபாகடாட்சமில் லானோசெவ்வேளவன் கேகயமே. (௪0)

குகனுக்குவாகன மாமெனப்பாவலர் கூறிடலிற்
றகருங்களிறு மிருந்தாலுஞானத் தபோதனர்தம்
மகமுஞ்சதுமறை யாதியநூல்களு மைந்துவன்னத்
தொகரப்பரியினை யேமிகநாடி யுரைக்குமன்றே. (௪௧)

அயிலினைப்போற்று மடியார்க்கெளிய வறுமுகவன்
சயிலமெங்குஞ்செயுங் கூத்துடையான்கொடுந் தானவர்வா
ழெயிலொருமூன்று மெரித்தார்கட்பாலக னேறிவரு
மயிலினுக்கின்றிய வன்னமொன்றில்லையிம் மாநிலத்தே.(௪௨)

முற்றாதமென்முலை யார்சாயலுண்டுமுன் மூவெயிலுஞ்
செற்றார்தந்தன்மையுண் டின்றமிழ்ப்பாவலர் சேர்க்கையுண்டு
சொற்றார்மிடியைத் தொலைக்கின்றபண்புண்டு தொண்டர்தம்பால்
வற்றாக்கருணையுண் டெங்கோனடாத்து மயிலிடத்தே. (௪௩)

தேனோவெனுந்தமிழ்ப் பாவலர்மீது சினந்திகழு
மேனோரைக்கொத்திக் கிழித்துண்டகவ லியற்றுவது
வேனோங்கும்வெற்பெங்கும் வாழ்பெருமாள்செங்கை வேற்பெருமாள்
வானோர்கள்சேனைப் பெருமாண்மயூரத்தின் வாய்க்குணமே.

எல்லாக்கடவுளு மொன்றாய்விளங்கு மெழிற்குமர
னுல்லாசத்தோகை மயிலைவேற்படை யோடுமுள்ள
வல்லார்க்குத் தொண்டுசெய் வார்தங்கள்பேர்சொல்லின் மாநிலத்துப்
பொல்லாதபூதப்பி ரேதபசாசம் பொடிப்படுமே. (௪௫)

செந்தமிழ்ப்பாநயந் தேறாதமூடர்பின் சென்றிரந்து
நொந்தயராதுகண் பார்த்தருள்வாய்தவ நோற்பவர்க்கு
மந்தரத்தோர்க்குந் துணையாஞ்செவ்வேள்பதத் தன்பகலாச்
சுந்தரத்தோகை மயிலேயென்னாருயிர்த் தோழமையே. (௪௬)

யான்செய்தகுற்றங்கள் கோடானுகோடியுண் டென்னினுஞ்சேய்
தான்செய்துளானெனச் சொல்லவஞ்சேன்மலை தன்னிலன்றோர்
வேன்செய்ததாலல்ல வோவந்தனாயமு மெய்ம்மையன்றோ
கான்செய்தசெச்சை மலர்த்தாள்சுமக்குங் களிமயிலே. (௪௭)

எத்தனைபாடல்க ளோவென்றனெஞ்சத் திடைவிளங்கி
யத்தருணத்தி லெழுதாமையாலங் கழியுமின்னுஞ்
சித்தசனுமெனைழிற் செவ்வேள்கருணை செயநண்ணிலான்
பத்தர்கொண்டாடுந் தலந்தோறுஞ்செல்லும் பருமயிலே.

கானவப்பேதையை யேனற்புனத்திற் களவுசெய்யப்
போனவன்றன்பத மேதஞ்சமென்னப் புகன்றருகு
நானவமானப் படலாகுமோவெண்ணு நன்மைநல்காய்
வானவலாரியுஞ் சூரனுமாகிமுன் வாழ்மயிலே. (சகூ)

காளியைப்போற்றினர் வாழ்வுமெய்தாமற் கலங்குமென்னை
மீளியர்சேகர னுச்செய்யுமாறு விரும்புவையோ
தோளில்வைவேலணி வான்றன்னைநாளுஞ் சுமந்ததனுற்
கோளின்மெய்ப்பேறுறு மாமயிலே நிந்தை கொல்கின்றதே.

காறுசூழுங் குறிஞ்சிக்கிழவன் கழற்றுணையிற்
றேனுறுபாய்ந்தன்ன செந்தமிழ்ப்பாடல் செறிக்குமென்னை
யூனுறும்வாயுடைத் தீயோருநிந்தை யுரைக்கைநன்றோ
வானுறுசூடியைப் போனீலகண்ட மருவுபுள்ளே. (ருக)

எவ்வகைப்பேறிங் கடையாதுமாயினு மீனமலி
தெவ்வர்தம்புன்னெறி பாழாகுமாறு செயக்கருது
மிவ்வபிமான மெனக்கீந்ததார்கொ லெழிற்கலபச்
செவ்வனநீழலிற் சேய்தோன்றுநாடகச் சீர்மயிலே. (ருஉ)

ஆனிளங்கன்றையுங் கொல்லும்பொல்லார்மிக் ககங்கரிக்க
நாணிவண்வாடுறச் செய்யுமிக்கால நசிக்கினன்றி
வானின்மெய்ப்பேறு விழைபேன்கண்டாயிது வஞ்சகமன்
ஞானிழிவேற்பெரு மான்றனைத்தாங்கு மொருமயிலே. (ருங)

செந்தூரிலன்றொரு தீயோன்கண்முன்னுந் திகழ்ந்துளநீ
வந்தூறுதீர்த்தென்னை யாண்டானின்மேன்மை மறையுங்கொலோ
விந்தூருஞ்செஞ்சடைக் காடுடையார்தவ மீயவந்த
சிந்தூரமேனிக் குகவேள்கடாவுஞ் சிகிப்பரியே. (ருச)

செங்கோலிழந்து கொடுங்கோல்விரும்புஞ் செயலவுணர்
தங்கோரந்தீர்ப்பவ ராரேனுஞ் சண்முகன் றொனைவே
யிங்கோது வாரொ டெனைக்கூட்டவேண்டு மிமையவரு
ரங்கோலவாழ்வை விரும்பார்பராவு மணிமயிலே. (ருரு)

சண்முகப்பண்ணவன் றன்னைமுற்காணத் தவம்புரியு
மெண்முகச் சிந்தை யுடையீருமக்கொன் றியம்புகின்றேன்
விண்முகத்திற்குமப் பாற்சென்றுநாளும் விரியுமெழிற்
கண்முகத்தோகை மயில்வாகனத்தைக் கருதுமினே. (ருசு)

என்னுடலாதிய மூன்றுங்குகனெ தெனத்தெளிந்துந்
துன்னுமிவ் வாணவப் பேய்நீங்கிடாவிதஞ் சொற்றருள்வாய்
கொன்னுதிவேலுங் குலிசமுஞ்சூலமுங் கொள்குமரன்
றன்னுயிர்போலு மயிலேயெவ்வாறென் றவமுற்றுமே. (ரு௭)

முக்கணுள்ளான்முத லாமூவர்போன்மகிழ் மோகமுற்றுங்
குக்கலொப்பாரிடம் போயிரந்தேனிக் கொடுமையென்றே
வெக்கணத்தித்துயர் தீர்த்தாளவேலனொ டிங்கெய்துவா
யக்கரமாறுரைப் பார்தம்மைநீங்கரு மாண்மயிலே. (௫அ).

சிந்தனைமட்டி லடங்காவிரக்கஞ் செறிந்ததனா
லிந்தவிதத்துன்ப மெய்திநொந்தேனிங் கெனக்கருட்சீர்
வந்தடைந்தானல மின்றேற்கணத்தின் மடிதனன்றாங்
கந்தனைச்செங்கைவை வேலுடன்றாங்குங் கனமயிலே. (௫௯)

துதியேனென்பாரைத் தொடர்ந்தாளுந்தன்மையுந் தோத்திரிக்கும்
விதியாளர்தம்மைப் பலவாறுசோதிக்கும் வெங்குணமும்
பதியானகந்த னிடத்திற்கண்டேனென்ன பாவமந்தோ
சதிபாயுந்தாண்மயி லேயிதுதானெனுட் சஞ்சலமே. (௬௦)

ஓயாமலாறெழுத் தோதிக்கருதி யுருகுமென்னைப்
பேயாய்ப்படுத்துகின் றான்கந்தவேள்பெரும் பித்தனது
சேயானதன்மையென் றெண்ணுகின்றேனென் சிறுமனத்தி
னீயாயினுந்தினம் வந்தானன்றாம்வள்ளி நேர்மயிலே. (௬௧)

வெள்ளிய நீற்றணித் தந்தையைத்தாயரை வேழமின்னை
வள்ளியைவேட்டுக் குகன்போகுந்தோறுமென் மாட்டுவந்தியா
னுள்ளியவாறு செயுமாறுன்னுள்ளத் துரிமைவைப்பாய்
புள்ளியதோகை விரித்தாடிக்கூவும் புனமயிலே. (௬௨)

கொங்கேயுநீபம் புனையுநங்கோனின் குளிர்முதுகி
லெங்கேனும்போம்பொழு தென்னிடத்தேவந் திடுதியின்றே
லங்கேனுமென்னைக் கொடுபோய்விடுதி யருக்கனெல்குஞ்
செங்கேழ்க்கலாபக் குடையோடுலாவுஞ் சிகாவளமே. (௬௩)

தணிக்கின்றதற்கரி தாம்விடத்தீயுமிழ் சற்பங்களாற்
பிணிக்கின்றவாய்மயி லேதமியேன்கொள் பெருந்துயரங்
கணிக்கின்றவாறல்ல வாதலினூற்கடற் காவலரைத்
துணிக்கின்றவேற்படைப் பூசனைச்செல்வமுஞ் சொர்வுற்றதே. (௯௪)

முன்னங்கிளியுரு வானுன்சொறாணின் முருகனுடன்
மன்னன்களிப்புறவந் தாயென்றோதுஞ்சொல்வாய்மையென்றோ
லென்னன்பரோடடி யேன்கண்டுபோற்ற வெதிர்வருவா
யின்னந்துயர்ப்படச் செய்யேல்கலாபத் தெழிற்சிகியே. (௬௫)

வந்திக்குந்தொண்டர் குழாத்தொடேனையுமிம் மாநிலத்தோர்
சிந்திக்கும்பேறு விழைந்தேனைச்சண்முகன் றேற்றுகில்லான்
புந்திக்கும்புண்ணியப் பேராசைநல்கிப் புலரவிட்டான்
சந்திக்குநாளறி யேன்மயிலேநின் றருமமதே. (௬௬)

பன்னகப்பாயற் றிருமான்மருகன் பரிந்தெனக்குச்
சொன்னசொற்போலமுடிப்பானென்றெண்ணித் துயரமுற்றே
னின்னசொற்குண்மையொன் றேசாட்கியாகுமற் றியாறிவார்
நின்னகமெப்படி யோவவன்கோயின்முன் னின்றபுள்ளே. ()

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

விக்கிரமார்க்கனுக் கன்றோன் றுதித்து மிகப்பணியு
முக்கிரகாளிதன் வாகனஞ்செய்த வுதவியெண்ணி
மிக்கிரங்குந்தமி யேற்கருளாய்துங்க வேற்படையாற்
பொய்க்கிரவுஞ்சம் பொடித்தானைத்தாங்கும் புகழ்மயிலே.

பொன்னுடர்மங்கை மணவாளனைத்தினம் போற்றுமெனக்
கின்னுவுண்டாதன் முறையாங்கொலோவவ னெத்தனையோ
சொன்னுனதொன்று முடிக்கின்றிலானின் றுணைவிரும்பி
நன்னுவினுற்றுதிக் கின்றேனெள்ளேல்சிகி நாயகமே. (சுசு)

தாராளமாகக் கொடைகொடுப்பானிற் றமிழ்விழைந்து
பேரானதுந்தன தாளெனயாவரும் பேசிடச்செய்
தேரார்பைங்கிள்ளையென் றேகனவூடுற் றியம்பியெதிர்
வாராதகந்தனை யிக்கணமேகொண்டு வாமயிலே. (எ0)

என்னுசையுன்ற னுளத்தேசற்றுயினு மின்றெனினு
முன்னுசையென்மனத் துண்டுகண்டாயும்ப ரூர்புரக்கு
மன்னுல்வளர்க்க வளர்ந்தாளிருக்க மறச்சிறுமி
தன்னுளென்றேகிய வேடனைத்தாங்குந் தகைமயிலே. (எக)

அன்றுநின்மேற்கன வூடுவந்தான்ற னடிதொழுவேற்
கொன்றுநல்காமலி தோர்வேடமாமென் றுவைத்தவித
நன்றுகொலப்படிச் சொல்லியகாரண நானறியே
னின்றுனைவேண்டுகின் றேன்மயிலேயென்மு னின்றருளே.

சீலக்கருணை வழிபோய்த்தியான செபமுயன்று
சாலக்கடம்ப மலர்மாலைபோலுந் தமிழ்வளைந்து
கோலக்குமர குருநாதன்முட்கிடுங் கொள்கைவந்தா
ணீலக்கலாப மயிலாசைநெஞ்சி னிலவுமன்றே. (எரு)

புன்னுனிகவ்வுந் தரமுமல்லாத புணிற்றிளங்கன்
றின்னுயிர்நீக்கவு மஞ்சாருக்கஞ்சி யிடைதருநான்
மின்னுறழ்வேற்படைச் செவ்வேளைக்காண விரும்புகின்றே
னின்னுரித்தெப்படிச் செய்யுங்கொலோபைம்பொ னேர்மயிலே

யான்பாடும்பாட லிடத்தேபுணரு மியற்சொன்முற்றும்
வான்பாவுதென்மல யக்கிரிநாதன் வகுத்ததன்றோ
மான்பாய்தண்சார லருணைப்புலவன்சொன் மட்டுமதோ
கூன்பாண்டியன்சுரந் தீர்க்கவந்தானிவர் கோமயிலே. (எரு)

நெஞ்சகத்துஞ்சற்று மானமில்லாது நெறிபிழைக்கும்
வஞ்சகர்க்கியான்சற்று மஞ்சாதவாழ்வென்று வந்துறுமோ
குஞ்சரத்தாரகற் செற்றானைத்தன்மிசை கொண்டுலவு
மஞ்சனக்குன்றெனக் குன்றங்கடோறு மவிர்மயிலே. (எசு)

ஆதாளியிட்டு வரும்பூதசேனைக் கதிபதியாய்
நாதாந்தமோனத்தி னிற்பானுமாங்கந்த நாயகனை
மீதாகக்கொண்டு நடமாடித்தோகை விரிக்குமயில்
சீதாரவிந்தத்து வேதாவென்பான்சிட்டி செய்ததன்றே.(எஎ)

இனிக்கும்பனிமொழி யார்மையலுேய்கொண் டிளைக்குமென்னைத்
தொனிக்கும்பெரும்புகழ்த் தேசிகனுக்கத் துணியுங்கொலோ
தனிக்குங்கருணைக் குகவேலை த்தாங்கிச் சயிலமெங்குங்
குனிக்குங்கலாப மயிலாவடிவங் கொளுஞ்சத்தியே. (எஅ)

பேதாதிபேதப் படுநூலெல்லாஞ்சொல் பிரணவத்தோ
டோதாத மந்திரம் போற்கவுமார ருளுற்றுதொழிற்
காதாரம்வேன்முத லியாதிருந்தாலு மறுமுகனை
மீதாகக்கொண்மயிற் றொண்டில்லையேல்வம்பு மேவிடுமே. ()

வித்தைக்கடற்கடந் தானந்தவாரியின் மேவியருட்
சித்தைக்கருதித் தியங்கவல்லீரயிற் றிண்புயத்திற்
றத்தைப்பறவையுஞ் சேவலுந்தாங்குஞ் சரவணனை
நத்தைக்கைமாணிகர் தோகைமயூரத்தி னுடுமினே. (அ0)

நானுகவுன்னை விரும்பாவிடினுமென் னன்மனத்திற்
றானுகநீவந் தொளிரவொண்ணாதுகொல் சண்முகவேண்
மேனுளிலென்னைக் கிளிதானெனச்சொல்கை மெய்யல்லவோ
தேனூரகவற் றொனிகாட்டுநாடகச் செஞ்சிகியே. (அக)

இன்னங்கிளிவடி வாய்க்கந்தவேள்கையி லெய்துவனோ
பொன்னங்கழலிற் புகுவேன்கொல்லோமுலைப் போர்புரியு
மன்னம்பொருமங்கை மார்வயிற்றாடுற் றலமரும்பாழ்ங்
கின்னங்கிடைக்குங்கொ லோவறியேன்பசுங்கேழ்மஞ்ஞையே.

காமர்க்களப முலையார்மயலிற் கலங்கிடினு
நேமப்படியெழுத் தோராறுங்கூறி நினைத்திடினு
மீமத்திலாடும் பிரான்மகனுங்குக னென்னைவிடா
னீமட்டுமுன்னர்வந் தானலமாகு நெடுஞ்சிகியே. (௮௩

வாகைக்கதிர்வடி வேற்குமரேசனை வாழ்த்தியரு
ளோகைக்கடலிற் குளித்தாலுமன்னவ னோடுகலப்
பாகைக்கவனாருக் காண்பதுவேண்டு மதுவிளைக்கை
தோகைக்கலப மயிலெனக்கூறுந் துரகதமே. (௮௪)

ஏங்குங்கருத்தொடு பல்லோர்தம்வாயி லிடந்தொறும்போந்
தீங்குங்கலியுங் கெடுமாறுன் பேரெழிற் சேவைநல்காய்
வீங்குந்துணைமுலை வேடிச்சிகேள்வன் மிகமகிழத்
தூங்குங்கழற்சிகி யேயென்றனாருயிர் சோர்கின்றதே. (௮௫)

பேட்டுக்குயிலன்ன சொல்லார்வயிற்றிற் பிறந்தயரா
வீட்டுக்குரிய தவத்தாருணரும் விசாகனுக்கோ
ராட்டுக்கடாவுங் களிற்றானையொன்று மமைந்திடினுஞ்
சூட்டுத்தலைச்சிகி வாகனம்போலுந் துணையல்லவே. (௮௬)

சொன்னசொல்லாற்பல கான்மாறிமாறித் துதித்தழைக்கு
மென்னதுமுன்னும்வந் தாற்புகழ்ச்சீலமிக் கெய்துமன்றோ
பன்னகமுண்டது பூண்டதிலாடும் பசியவெற்பிற்
றென்னர்பிரானென வந்தானைத்தாங்கித் திகழ்மயிலே. (௮௭)

சித்திரத்தோகை மயிலேயுனைவிட்டுச் செங்கைவைவேல்
வைத்திருக்குங்கந்த வேளையெனது மதிமயங்கு
நித்திரைப்போதினு மெண்ணலுண்டோவில்லை நிச்சயநீ
பத்திரமாயெனைக் காக்குங் கடமை பரித்தருளே. (அஅ)

சிரித்துப்புரத்தை யெரித்தார்புதல்வனைச் சீர்முதுகிற்
றரித்துத்தினந்தின நாடகமாடுந் தனிச்சிகியை
யுரித்துப்படத்துதி செய்யாதபாவல ரொண்புவியின்
மரித்துப்பிறக்கும் வினைநீங்கிடாரென்சொல் வம்பல்லவே.

எந்தவிதத்துங் கலிவேரறுத்திட் டிகத்திடத்தி
லந்தண்கருணை நிலைநாட்டவேண்டு மவாவடைந்தேன்
கந்தனுமொத்துரைத் தானவனேடுமென் கண்ணெதிர்நீ
வந்தருளாய்மயி லேகுறையேதும் வராதுனக்கே. (கூ0)

வாயாரப்பொய்சொல்ல நானறியேன் குகன்வந்து சற்றுந்
தேயாத்திருவரு ளல்குமுன் பெற்றதிற் செப்புகின்ற
பேயார்சிலரு மகிழுமிப்பாரிற் பெரிதயர்ந்தேன்
காயாமலர்த்துணர் நேர்மயிலேயென் கவிக்கிரங்கே. (கூக)

முன்னிலையாவுனைக் கூவாதுன்கீர்த்தி மொழிந்திடினு
மென்னிதயந்திக்கேசெல்லுமோர்வியப் பென்னைகொல்லோ
பன்னிருகையும் படைதாங்கத்தேரிற் பரிந்துசென்று
வன்னியொக்குந்தலைச் சூரனைக்கீன்றவன் மாமயிலே. (கூஉ)

அண்டங்களியாவு முரோமநிரையி லமையுமுருக்
கொண்டங்குநின்ற முருகோன்றிருப்புகழ் கூறுமுண்மைத்
தொண்டன்கொலென்றெனைப் பல்லோரிகழத் துடித்தயர்தற்
கண்டன்பர்சூழவைத் தாயில்லையேயருட் கார்மயிலே. (௬௩)

விண்ணாடர்சேனைப் பெருமாள்சொருப விளக்கமுற்றி
மண்ணாதிநாதத் தொனியீறதாக வகுப்பவெல்லாங்
கண்ணார்கலாப மயில்வடிவேயெனக் கண்டுகொண்டாற்
பெண்ணாசைமுற்பக ரேடணைவேறெனப் பேசரிதே. (௬௪)

கள்ளப்புலமையும் வாய்ஞானமுங்கொண்டு காசினியிற்
றுள்ளப்படுஞ் சிலர்க்கொல்கிநின்றேனருட் டோற்றநல்கி
வெள்ளக்கடற்றுயின் மால்போற்குலாவும் விறலளிப்பாய்
வள்ளத்தனத்தெய்வ யானைதன்கோனிவர் வான்மயிலே. (௬௫)

நின்றோகையிற்சிறி தாயன்சிரத்தி னிலவவைத்திட்
டன்றோபல்கோடி விளையாட்டியற்றின னன்புசெய்யு
மென்றோடநீக்கி யருள்வாழ்வளித்தற் கெதிர்வந்திடாய்
மின்றோற்கும்வேற்படை யாற்குன்றைவென்றசெவ் வேண்மயிலே.

எவ்வுயிர்கட்கும் பொதுச்சாட்சியாய்த்திக ழியாவையுமாஞ்
செவ்வுருவக்குக னேறுங்கலாபச் சிகிப்பரியே
யிவ்வுருவத்தொ டினிப்பிறவாநல மெய்துவனோ
கௌவுபெழ்வாய்க்குக்கல் போன்மனமாயையிற் கட்டுண்டதே.

ஆறுசமயமுந் தன்முகமாமென் றறியுமன்பர்
வீறுசிந்தைக்கிடை வீற்றிருக்குங்குக வேண்மயிலே
தேறுமுனிவர் திருவேடமிட்டுஞ் சிறியவர்போன்
றாறுபட்டேனைய கோவென்னைவாழ்விக்க வுன்னுதியே. (௯௮)

நீறேறுஞ்சென்னிப் பெருமான்கண்ணீன்ற நிமலப்பிரான்
சாரூபமிந்த வுலகிடத்தெய்தத் தயங்கியது
நேரூழின்றாயினு நல்கவல்லாயென நேடுகின்றேன்
சீரூர்மயிற்றெய்வ மேயென்னவோநின் றிருவுள்ளமே. (௯௯)

பகலவன்மண்டலத் தேநின்றுநாளுந்தன் பக்கல்வர
விகலயில்வேலனை நாடிப்பணியு மியல்பினர்க்குப்
புகலண்டகோடிக ளுள்ளேபொருந்திப் பொலிகின்றவாஞ்
சகலவுலகு மயிலாவிளங்கிடுஞ் சத்தியமே. (௱)

முற்றிற்று.

நூற்பயன்

துலங்காரணங்களு மாகமக்கூட்டமுஞ் சொன்னபொது
நலங்காரனைய கருணையெண்சித்தொடு நல்குமென்றும்
வலங்காரகன்புகழ் சத்திவைவேற்செங்கை வள்ளன்மயி
லலங்காரத்தின்கவி நூறுந்துதிக்கு மடியவர்க்கே.

தெய்வமே துணை.

உ

முருகக்கடவுடுணை.

ஆறெழுத்தலங்காரம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

கழுத்தலங்கா ரப்பரமன் கண்ணருள்சேய் தன்னு
றெழுத்தலங்கா ரத்தை யியம்பப் - பழுத்ததமிழ்ப்
பாடுமுனிவன் பணிந்திறைஞ்சப் பாய்ந்துவிளை
யாடுமுனிபதங்காப் பாம்.

நூற்பிறப்பிடமும் பயனும்.

கட்டளைக் கலித்துறை.

நெல்லிக்கனியிரண் டன்னபொற்கொங்கை நிலவுதெய்வ
வல்லிக்குங்கானமறத்திக்குங் கேள்வன்வயற்புனலி
லல்லிக்களைகொ ளருணையின்கோபுரத் தண்டினர்க்குச்
சொல்லித்தருமெழுத் தாறலங்காரச் சுகந்தருமே.

நூல்.

கட்டளைக் கலித்துறைகள்.

ஓங்காரம்பெற்ற வெழுகோடிமந்திரத் துள்ளுயர்ந்த
பாங்காருமாறெழுத் தேவடிவாகிய பண்ணவனை
யேங்காதுவாழவைக் குங்குருநாதனென் றெண்ணினர்க்கே
நீங்காச்சுகந்தரு மாதவப்பேறு நிலைநிற்குமே. (க)

பிரணவமான மயின்மீதெப் போதும் பிறங்கும்பிரான்
சரணங்களேதஞ்ச மென்றிருந் தன்பர் தமைத்துதித்து
மரணந்தனக்குமஞ் சாதிறு மாந்துள்ள மாதவருக்
கரணங்கள்போலுந் துணையாதென் றோர்ந்திடு லாறெழுத்தே

அயில்வேலணிந்து மலைதோறும்வாழுமென்னப்பனைப்பின்
மயில்வாகனப்பெரு மானெழுத்தாறு மனத்திருக்கக்
குயில்போலுஞ்சொல்லியர்க் கஞ்சாதுலாவுங்குறிப்பினர்க்குப்
பயில்வேதமாகம மாதியநூலின் பயனெய்துமே. (ந)

கோலாகலக்குக வேளெழுத்தாறுங் குணமெனத்தேர்ந்
தாலாலமுண்டவன் பெற்றதைநாடி யகங்குழைந்து
வேலாயுதத்துக்கு மேலாயுதமற்ற வெற்றிசொல்லிப்
பாலாழிமால்புகழ் சீர்புனைந்தாரிங்கு பற்பலரே. (ச)

மின்னுனும்வேற்படைக் கையான்பல்லாயிரம்வெற்பினுக்கு
மன்னனவேளடி யார்க்கெளியானென்று வாழ்த்தியவன்
றன்னுறெழுத்துங் கருதித்தவஞ்செயுஞ் சற்சனருக்
கின்னுசெய்வார்குல வேரடியோடறுமென்சொன்மெய்யே.

வைகொண்டவேலன்ற னுறெழுத்தோதின் மனங்குவியும்
பொய்கொண்டமாயையெல் லாம்பொடியாகும் புகழ்மலியுங்
கைகொண்டமட்டுங் கொடுத்துக்களிக்குங் கருணையுண்டா
மெய்கொண்டசித்தியெட் டுந்தனிவீடும் வெளிப்படுமே. (சு)

கானக்குறத்தி பிரானெழுத்தாறுங் கருதினர்க்கு
மோனக்குறியுணர்த் துங்குளறுத மொழியளிக்கு
ஞானக்கண்காட்டு நவைதீர்ந்தமெய்ப்புகழ் நல்குமென்று
வானத்தினரு நிலத்தோருங்கூறும் வழக்குள்ளதே. (எ)

சண்டனுமஞ்சத் தகுஞ்சூரனைக்கொன்று தண்ணருளால்
விண்டலத்தாரைப்புரந்தபெம்மான்வெற்றி வேன்முருகோன்
றண்டமிழ்க்கும்ப முனிபோற்றுஞ் சண்முகத் தந்தையென்பார்
கண்டனயாவு மெழுத்தாறென்றோதிடல் கட்டுரையே. (அ)

ஆறுதிசையுஞ் சமையங்களாறு மவுணர்களைக்
கீறும்வைவேற்பெரு மான்முகமாறுங் கிளத்துமவை
வேறுளயாவு மெழுத்தாறென்றேநம்பி வீட்டுநலந்
தேறுமவர்கள்பொற் றுண்மலர்த்தாள்களென் சென்னியவே. (கூ)

வெள்ளைக்கலைமகட் குத்தமிழ்நூல்சொல்லும் வித்தகனைக்
கிள்ளைக்கவிக்கு மிரங்கும்பெம்மானைக் கிரிச்சுரன்றன்
பிள்ளைக்குமரனு மானமெய்த்தேவனைப் பேணுநர்க்குக்
கொள்ளைத்திருவரு ளேயெழுத்தாறுங்கொடுக்குமன்றே. (௰)

அன்பர்க்கிரங்கு மயில்வேற்குருபர னாறெழுத்தே
யின்பக்கடற்கொரு தாயெனத்தேறு மியல்பினர்க்குத்
துன்பக்கிரகங்க ளொன்பதுந்தீர்த்தொழிற் றுட்டர்களும்
வன்பற்புலிமுத லாமவைதாமு மனமஞ்சுமே. (௧௧)

காரணதேசிக னாமுருகோனைக் கருதுமன்பா
லாரணமூல முடிப்பாமென்றோங்கு மதையுணர்ந்து
பூரணஞானத்தி னாலெழுத்தாறும் புகலுமன்பர்
வாரணமஞ்சு மடங்கலொப்பாரென்னும் வையகமே. (௧௨)

வெய்யோனைக்கொண்டுசெய் தாலன்ன வேற்படை வித்தகனை
மெய்யோதுந்தொண்டர்சொற் போல்விளையாடும்விருப்பினனைப்
பொய்யோரறிவரி தாமெழுத்தாறும் புகவினன்றிக்
கையோங்குநெல்லிக் கனிபோலக்காணல் கடினமன்றே. (௧௩)

மழைபோலருள்பொழி கண்ணுடையான்முன்வனத்தினிடை
யுழையீனுங்கன்னிதன் கொண்கன்வெற்பெங்கணு முற்றசெவ்வேள்
பிழைதீருமாறெழுத் தோதிப்பணியும் பெரியவராற்
குழைதூங்குங்காது குளிர்பாடல்கோடி கொழிப்பிப்பனே.

செவ்வேலணிந்து மலைதோறுநிற்குஞ் சிறுவனுக்கு
முவ்வேழுதற்பக ரக்கரமாறு முறைப்படிக்குக்
குவ்வேமுதற்றுதிக் கும்பொறியாறுங் குவலயத்திற்
சவ்வேமுதற்றொனிக் கின்றவையாறுந் தகுந்தகுமே. (கரு)

முகரமிடையினத் துள்ளுகர முதிர்ந்திடுங்கா
யகரநகர மகரமென்றோங்குமிவ் வாறெழுத்தும்
பகரவல்லார்க்குச் சமரசஞானம் பழுப்பதன்றிக்
குகரளவற்ற விளையாட்டுங்காணுங் குறிப்பெய்துமே. (கசு)

சமரசபோதந் தரவல்லதான சடாக்கரத்தை
விமலமதாய பிரணவத்தோடும் விளம்பினர்க்குக்
குமரன்குருபரன் கந்தனென்றுவகைக் கோலமன்றி
யமரர்குழாந்தொழு மந்நெறிமூர்த்த மனைத்துநன்றே. (கஎ)

குவ்வுடன்மாவும் ரகரநெடிலுங் குலவுயவ்வு
நவ்வுமவ்வும்புண ரக்கவுமாரர் நவிலெழுத்தா
றெவ்வுருவிற்கு மிசையாதுநாற்புய மேய்ந்திருக்குஞ்
செவ்வுருவக்குகற் கேசொந்தமாமெனச் செப்பலுண்டே. ()

வெற்றிமிகுங்கவு மாரசடாக்கர மெய்மையெனப்
பற்றிநிற்பார்க்குத் திரிலோகத்துஞ்சென்று பல்பகையுஞ்
செற்றிடவல்ல திறலுமுண்டாமெனச் சித்தர்களுங்
கொற்றிவடிகன் முதலாயதேவருங் கூறுவரே. (கக)

சகரம்ரகரம் வகரம் ணகரந்தனிப்பகரம்
வகரமென்றுள்ள வெழுத்தாறுளொன்று மறுத்தும்வந்த
தகரமென்பார்சில ரன்றென்னிலேந்தெழுத் தாமதனு
லொகரநெடிலே முறையேகொண்டோதுவ துத்தமமே. (௨0)

சவ்வாதியாமெழுத் தாறும் பரமன் றழல்விழியிற்
செவ்வானச்சோதி யெனத்தோன்றித்தானவர் சீரழித்துத்
தவ்வாதுபொன்னுல கங்குடியேற்றிய சண்முகற்கா
மொவ்வாதுமற்றிங் கொருமூர்த்திக்கேனுமென் றோதுமினே.

குருவேநமவென்ப தோங்காரங்கூடிக் குலவுமெனிற்
பொருவேல்புனைந்த பிரான்முதலாவிதி போற்றிசைக்குந்
திருவேதத்துள்ள மெய்த்தேவர்க்கெல்லாந் தகுஞ்சேனுலகத்
தருவேந்தர்தோன்றிடிற் கொள்ளுஞ்சருவ சடாக்கரமே. ()

தள்ளாப்பெருமைமலிபுஞ்சருவ சடாக்கரத்தை
யெள்ளாத்தவத்தின ரெந்நெறியோர்க ளெனினுமவ
ருள்ளாடுந்தெய்வமெஞ்செவ்வேண்முகங்களி லொன்றெனக்கைக்
கொள்ளாதிகழ்வர்கொல் லோகவுமாரங் குறித்தவரே. (௨௩)

சைவன்சொலேந்தெழுத் தோங்காரங்கூடிற் சடாக்கரமா
மெய்வழக்கீதறி வார்பலர்சிற்சில வீம்பர்களே
பொய்வழியென்றிகழ் வாரிகழ்ந்தாலுமுட் புண்படுவார்
தெய்வசமூகமுருகோனென்பார்க்குண்மை சித்திக்குமே. ()

ஆதாரமாறு மெழுத்தாறென்றோது மருமறைச்சொற்
காதாரக்கேட்டு மலேயேயுயர்வெனக் கண்டுமலர்ப்
போதாவெழுத்தழிக்குந் திருத்தாட்குகன் பூசைசெய்யார்
மாதாவயிற்றிடத் தின்னமும்போய்வரு மானிடரே (உரு)

எந்தச் சமயத்தி லெவ்வகைத் தேவர்க் கெவருரைக்கு
மந்தத்திருமொழியாறெழுத்தாகி லதுவுமெங்கள்
சொந்தக்குமரன தேயென்றுகூறுந் துணிவுடையா
ரிந்தப்புவியிடத் தின்னம்வராமுத்தி யெய்துவரே. (உசா)

நூறெழுத்தோதினு மோரெழுத்தோதினு நுண்ணியருக்
காறெழுத்தின்பய னுத்திகமுண்மை யறிந்துவிதி
யூறெழுத்தைத்துடைத் தாள்வான்குகனென வுன்னுமன்பர்
கீறெழுத்தத்தனை யுங்கவியாகிக் கிளருமன்றே. (உஎ)

மாறுதலின்றி விளேயாடுஞ்சண்முக வானவனேத்
தேறுதற்குத்தக்க மெய்த்துணேயாகித் திகழுமெழுத்
தாறுமிதென்றெவ ரெவ்வாறுகூறினு மாகுமென்கை
கோறுதலின்றியமெய்த்தவத்தாற்கண்டு கொள்வதுவே(உஅ)

வேலாயுதமுடை யானெழுத்தாறும் விரும்பினரைச்
சேலாருமைக்கண் ணுமைபாகன்றனுந் திகிரியணி
மாலாதித்தேவரு மாதவத்தோர்களு மன்னர்களு
மேலாநெறிக்குரி யாரென்னநாடி வியப்பதுண்டே. (உகூ)

ஆறு திசையு முகமாய்ச்சமையங்க ளாறிரண்டும்
வீறு திண்டோணிரை யாயெண்ணிலாகம வேதமெல்லாங்
கூறுநெறியிரண் டுந்தாள்களாகிக் குலாவுருக
னீறுதவிரெழுத் தாறுருவாய்நிற்ப தென்றறைக்குமே. (௩௰)

துட்டப்பசாசின மெல்லாமுநீறிநிர்த் தூளிபடச்
சுட்டட்டதிக்கும் புகழோங்கக்கண்டபின் றொண்டருக்கு
மட்டற்றஞானந் தருமா றெழுத்தை வழுத்துகிலார்
கட்டப்படுவரென் றேபலநூலுங் கழறுமன்றே. (௩௧)

கொன்றானுண்டுள்ள கொடியோர்நிணங்களைக் கூளியினந்
தின்றாடிக்கூடி விளையாடத் தாக்குந் திருக்கைவேலோ
லொன்றான்றிநின்றசெவ் வேளெழுத்தாறு முரைப்பவர்க்கு
நன்றாமல்லாற்பின்னை யூழில்லையில்லைமெய் நம்புமினே. (௩௨)

நல்லோர்தொழுமுரு கோனெழுத்தாறுமெஞ் ஞானநல்குஞ்
சொல்லோங்கக்கேட்டும் பலகோடிதெய்வந்தொழத்துணிந்து
கல்லோலவாரிதி யன்னதொன்னூன்மிகக் கற்றுமல்வா
ரெல்லோருமின்ன மனேகஞ் சரீர மெடுப்பவரே. (௩௩)

நெட்டிலைவேற்பெரு மானெழுத்தாறு நிதமொழிந்து
மட்டின்மெய்க்கீர்த்திகொண் டோரடித்தாமரை மாமலரிற்
பட்டிகத்துள்ள நகர்வீதிதோறும் படிந்ததுக
ளொட்டியசென்னி யுளார்தம்மைநாடி யுருகனன்றே. (௩௪)

ஆணாகிப்பெண்ணுரு வாயலியாகு மறுமுகனைக்
காணாதகண்க ளொடுபிறந்தோர்கள் கருதரிய
மாணாருமாறெழுத் தேமுதுநூல்களின் வைப்பெனினும்
பேணாதமூடர் மனுப்போ லுலாவிய பேயினமே. (௩௫)

அஞ்சக்கரத்திடை யாறெழுத்துற்பவ மாயிற்றென்னுங்
கொஞ்சக்கருத்தறை நான்மதியேன்முன் குறுமுனிக்கு
நஞ்சக்கறைக்கண்ட னார்க்குமருணை நகர்ச்சிகரித்
தஞ்சக்கிளிக்கு முபதேசங்கூறிய சண்முகனே. (௩௬)

சள்ளிட்டுவாத மிடுவார்வெறுக்குஞ் சடாக்கரத்தை
யுள்ளிற்பொறிக்கு மடியார்பதத்தி லுரிமையுற்றாற்
கள்ளிற்குநாணுந் தரலானசந்தக் கவிதையுண்டாம்
வெள்ளிக்கிரியுடை யான்பெற்றஞானம் விளங்கிடுமே. (௩௭)

பொதியாசலத்துக் குறுமாமுனிவன் புகன்றதமிழ்த்
துதியான்மகிழ்முரு கோனெழுத்தாறுஞ் சுகம்விளையும்
பதியாமென்றோர்ந்துவை வேற்பூசைசெய்யுநற்பண்படைந்து
நிதியால்வருத்த முறலாகுமோவென்று நீங்கிடுமே. (௩௮)

என்வாய்த்தமிழ்ச்சுவை யானறியேனென் றியம்புமன்பர்
மன்வாழ்வையுமதி யாரெனக்கேட்டு மயங்குமென்னை
நின்வாரிசப்பதத் தாளாக்கிக்கொள்ள நினைப்பதுண்டோ
கொன்வாய்ந்தகோணத்து ளாறெழுத்தாநின்ற கோலத்தனே.

ஐம்பூதமும்பரி பூரணந்தானுமொ ராறெழுத்தாய்
நம்பூகமுள்ளவர்க் கெல்லாங்கொடுக்கு நலமறியேன்
செம்பூரவாகனத் தாள்கற்குநூற்பயன் செப்பியப்பால்
வெம்பூதச்சேனை யுடன்போய்வன்சூரனை வென்றவனே. (சம)

தாக்குந்திருவரு ளாறெழுத்தாகிச் சதுமறையுண்
டாக்கும் பெருமை யறியாதவருக் ககிலமெல்லாங்
காக்குந்திருநெடு மால்செய்யுமாயைக் கடற்சுழியை
நீக்கும்பெருமை கிடையாதென்பாரது நிச்சயமே. (சக)

காரணத்தோடதன் காரியந்தானுங் கருதிடுங்கால்
வாரணக்கேதனச் சண்முகவேடன் மலரடியென்
ஞரணக்கூட்டங்க ளெல்லாம்பகர்ந்துற்று மாறெழுத்தே
பூரணப்போதந் தருமென்றிடார்பல புல்லர்களே. (சஉ)

கஞ்சனைக்குட்டித் தலைபூட்டியாண்ட கடவுளென்று
மஞ்சனமேனித் திருமான்மகளிர்க் கருகனென்றுங்
குஞ்சரமூர்த்தி யுடன்மூன்றுஞானக் குருக்களென்று
நெஞ்சகத்தானினை வார்க்கெழுத்தாறு நெடுந்துணையே. (சங)

நாலிரண்டத்த முடையான்படைப்பு நடுக்கடலின்
மேலிருமாத ருடன்றூங்குவான் செய்யுமெய்த்திதியு
மாலினுற்றன்றொரு நால்வர்க்கருளு மவனழிப்பும்
வேலிலங்குங்காத் தானெழுத்தாறுன்னில் விட்டிடுமே. (சச)

அஞ்சானனத்தா ஞுறுனனங்கொண் டமர்ந்தனனென்
றெஞ்சாதமெய்யன்பி னற்பகர்வார்க்கு மிரங்கும்பிரா
னெஞ்சாரச்சொன்னசொல் லாலெழுத்தாறு நினைக்குமென்னை
மிஞ்சாணவப்பிணி யென்செய்யலாமடி வெண்கொடியே. (சரு)

கண்டனயாவு மெழுத்தாறென்றன்பிற் கருதுகின்ற
தொண்டர்தந்தாண்மலர்த் தூள்களென்சென்னியிற்றோய்வதன்முன்
வண்டர்தம்புன்சவை தோறும்புகுந்துபோய் வாதமிட்டு
மண்டலத்தோரிக ழுத்தடுமாறி மருண்டனனே. (சசு)

நாயிற்புலாலுண்டு திண்டாடுகின்ற நரரையெல்லாம்
பேயிற்கருதி யடியாருக்குண்மைப் பெருக்கநல்குஞ்
சேயிற்குரிய வெழுத்தாறுங்கூறித் திரிபவரை
யாயிற்கனக நகர்க்கோனின்மேலென்னு மம்புவியே. (சஎ)

அட்டாங்கயோகமு மாறெழுத்துண்மைக் கடக்கமென்ன
நட்டார்க்குஞ்சொல்லு நலத்தோரைநாடி நகுங்கொடியோர்
பட்டாங்கிற்சொன்ன படியென்றுரைத்த பழமொழிபோ
லிட்டாதரிக்குங் குணத்தோர்தமையு மிகழ்வதுண்டே. (சஅ)

அக்கரமாறு மறிவாரைக்கெஞ்சி யடுத்தவருஞ்
செக்கரைப்போலுங் குகவேள்பதங்களிற் சேர்வரென்கை
முக்கணன்போலு முனிவோர்க்குமெய்மற்றை மூடருக்குப்
பொக்கமேதயல்ல வோவெள்ளைமாமலர் பூத்தமின்னே. (சகூ)

அன்றேயெனைத் தடுத்தாண்டசெவ்வேற்குக வாறெழுத்து
மொன்றேபரமென் றுணர்த்துமின்னார்மய லோடச்செய்யும்
பொன்றேடும்வாணிபர் போலருள்சேர்க்குநற் புந்திநல்கும்
குன்றேறியாடுந் திருத்தாள்களிற்புகக் கூட்டிடுமே. (ருக)

பதுமாதனத் திரு மின்னார் தங்கேள்வர் பரவுபுகழ்ச்
சதுராளராகச் செயுந்திருமந்திரஞ் சண்முகத்துப்
பொதுவானதெய்வத்தி னாறெழுத்தேயெனும்புண்ணியர்பால்
விதுவாமுகத்தணங் கார்மயற்கோட்டி வெருண்டொல்குமே.

சந்தேகமின்றி யெழுத்தாறுங்கூறித் தமிழ்ப்புலமைச்
செந்தேன்சுவைபுணர்ந் தோங்காரமோனத் திருவருளைத்
தந்தேகதத்துவங் காட்டுஞ்செவ்வேண் மலர்த்தாளடைந்தார்
நந்தேறுஞ்செங்கைத் திருமாலுநாணு நலத்தினரே. (ருஉ)

துக்கத்தின்மூழ்கிப் பரதவிப்பீர்மதன் றொட்டகணை
தைக்கத்தளர்ந்தவர் போற்புனத்தேகித் தனிப்பரணின்
மைக்கட் குறத்தியைத் தெண்டனிட்டோனை மனத்திலுன்னி
முக்கட்பிரானெனன வாறெழுத்தோதன் முயன்றுய்மினே. ()

ஈனர்தம்முள்ளக் குறிப்பறியாம லிரந்துழலப்
போனதுங்கெட்டதும் பேசுகின்றீர்குறப் பூவையுடன்
வானவர்கோன்மகள் சேர்முருகோனை வணங்கியவற்
கானநற்பூவெடுத் தாறெழுத்தோதி யருச்சியுமே. (ருச)

அயில்வேலணிந்த பிரானெழுத்தாறு மகங்குழையப்
பயில்வார்தம்மோடு பழகாமற்செத்துப் பலபிறப்பில்
வெயில்சேருமென்புழுப் போற்றவிப்பார்தம் விழிகளின்முன்
னெயில்வேவச்சுட்டவர் போற்றிகழ்வாரெம் மினத்தவரே.

குழையா றிரண்டணி காதுடையான்கை குவிக்குமன்பர்
பிழையானபாடல் பகர்ந்தாலுங்கேட்கும் பெருந்தகையென்
றழையா திருப்பவ ராறெழுத்தோ தினு மண்டர்சுற்ற
மழையாம்பரியுகைப் போனெனப்பூமியில் வாழ்பவரே. (௫௬)

வஞ்சகநெஞ்சக் கொடியோரைவேல்கொண்டு மாய்த்தமரர்
தஞ்சமென்றுற்ற தனித்திறலோன்றன் சடாக்கரத்தை
மஞ்சடர்சோலைக் கிரிதோறுஞ்சென்று வழுத்துமன்பர்
செஞ்சரணங்களை யேபணிவார்க்கில்லைத் தீதென்பதே. (௫௭)

காளிக்குநெஞ்சங் கலங்கிடத்தாக்கிய கையுடைய
மீளிக்குஞானப் பொருளீந்தவேலவன் வெட்சிமலர்த்
தாளிற்கலப்பவர்க் காமெழுத்தாறுஞ் சரதமென்ஞோர்
வேளிக்குவில்லுக் கிரையாகுவாரென்கை மெய்மொழியே. ()

பிணியாவுந்தீரும் பிறவாதபேறு பெறப்பிறந்த
மணியாமெனத்திகழ் வார்க்குறவாகுநல் வாழ்வுமெய்துந்
திணியார்ந்த நெஞ்சுடை யார்தம்மைவெல்லுந் திறமையுண்டாங்
கணியாகிநின்ற பிரானெழுத்தாறுங் கருதிடினே. (௫௯)

பொய்ச்சத்தியாவும் பொடியாகத்தாக்கிப் புகழ்பொறுத்த
மெய்ச்சத்திவேற்பெரு மானரிதோன்றும் விரலிலங்குங்
கைச்சத்திபாலனென் றுந்திகழ்சீருடைக் காரணனோர்
மைச்சத்திதாள்பணி வோனெழுத்தாறுமென் வாய்ச்செல்வமே.

அண்டர்தம்மூர்புரப் போனெழுத்தாறுமெய் யாகுமென்பார்
கொண்டலைப்போலச் சலியாது நல்குங் குணத்தினராய்க்
கண்டவர்கண்ணுங் கருத்துங்களிக்கின்ற காட்சியராய்
மண்டலத்தும்பரலோகத்தும்வாழ்வர்மெய்வார்த்தையிதே.

அடியார்க்கடிமைப் படுவார்க்கெளியவ னாறெழுத்தைக்
கொடியாடும்பங்கயத் தாள்வேண்டிநாடுங் குறிப்பினர்சொற்
படியாவுமாகுமென் றுன்னியஞ்சார்தம் பரிசழிக்க
விடியாதியாமிடை யூறெண்ணில்கோடி யிலங்கினவே. (௬௨)

குக்குடந்தாங்கிய செங்கைக்குமர குருபரனைப்
பக்குவநல்கிப் பரிந்தாளுஞ்சண்முகப் பண்ணவனை
யக்குடையான்புக ழாறெழுத்தாற்றுதித் தன்புசெய்தான்
முக்குணந்தீர்ந்த பரஞானமோன முடிப்பெய்துமே. (௬௩)

என்னாணையென்னை யிகழாமலாட்கொளென் றீரமின்றிச்
சொன்னாலுங்காக்கு முருகோன்விண்ணாடர் தொழுங்குகவேள்
பன்னாகமீது நடமாடுந்தோகைப் பரிப்பெருமான்
முன்னாளி லாறெழுத் தேவடிவாகி முளைத்தனனே. (௬௪)

அழியாதபேறுத வுங்குருநாதனை யாறெழுத்தால்
விழியாரக்கண்டபின் னெண்வகைச்சித்தும் விளைத்துநல்லோர்
பழியாவுந்தீர்த்துப் பதஞ்சேர்ந்தமேலவர் பண்புமுற்று
மொழியாற்பகரவென் னுற்சேடனாலு முடிவதன்றே. (சுரு)

அருளுருவாமெழுத் தாறுங்கருதிய தாலல்லவோ
சுருளுடற்பாம்புமிழ் வெவ்விடந்துய்த்துந் தொடர்ந்திருவர்
வெருளுறச்சூல்த்தி னற்குத்திவீழ்த்தியும் வேதமுதற்
பொருளுணர்ந்தீச னழியாதவுண்மைப் புகழ்பெற்றதே. (சுசு)

பீலிமுடித்தெழுத் தோராறுங்கூறிப் பெரும்பகையை
வேலினைக்கொண்டு மடித்தோன் முன்னொரு வெங்களிற்றின்
மேலிகலாழியை விட்டிழுந்தானவன் மெய்த்தொழும்பின்
கூலியதாகக் கொடுத்தான்குமர குருபரனே. (சுஎ)

ஓரெழுத்தின்பயன் றேராமுன்கொண்ட வுரமழியக்
கூரெழுத்தாணி மறைதண்டுசக்கரங் குண்டிகைவிட்
டாரெழுத்தென்றலைக் கிப்படியோவென் றழுவயனைச்
சீரெழுத்தாறுடை யான்குட்டல்கேட்டுந் தெளிந்திலனே.

குறுமாமுனிவனுள் ளாறெழுத்துண்மை குடிகொண்டதாற்
பெறுமேன்மையெத்தனை யென்றுரைப்பேன்முன் பெருங்கடனீர்
சிறுமாடம்போலச் சுருங்கிப்பெருகலுஞ் சேவுடையா
ருறுமேருவைப் பொதியாசலங்காத்தது மொப்பனவே. (சுகூ)

நாரதன்செய்த மகத்தூடொராடுபன் றுலகுஞ்
சீரணுஞ்செய்யுஞ் சினத்தோடுதித்திடிற் றேவர்களும்
பாரவர்தாமும் பணியாவுமற்றுள பல்கணமு
மோரமில்லாமனத் தாலெழுத்தாறுரைத் துய்ந்தனரே. ( )

வெண்பாவைகோனும் வியாதனெப்பாஞ் சிலமேலவரு
நண்பாலுரைத்தமுன் னூற்றொகைபோற்றிய நன்னெறியி
னெண்பார்க்கி லாறெனத்தோன்றுகையா லவரியாவருக்கும்
வண்பாவு மாறெழுத் தேதுணையாமென்கை வல்வழக்கே. ( )

சாத்திரமாறு நெறியாறுமின்பத் தமிழறிவார்
நேத்திரம்போலு மிலக்கணமாறு முண்ணீடிநிற்குஞ்
சூத்திரமாறு மெழுத்தாறென்றெண்ணித் துணிந்துகுகன்
றோத்திரஞ்சொல்ல வல்லாரிகழாநலஞ் சூழ்வதென்றே. (௭௨)

வாரணமாமுகன் பிற்றோன்றலென்கினும் வந்தருளும்
வீரனையாறெழுத் தாற்றுதிகூறி மிகநினைத்த
கீரனன்றுய்யப் புரிந்தானையுத்தமர் கேட்பதெல்லா
மாரணம்பாற்றளரா தவன்றாள்புகும்வாழ்க்கையொன்றே.(௭௩)

பொய்யாமொழிப்புல வோனெழுத்தாறும் புகலுமுன்ன
மையார்கட்கோதை யுடன்மிடியாற்பட்ட வன்சளமு
நெய்யார்கடம்பனுக் காளானபின்பு நிறையருளா
லொய்யாரம்பெற்றதுநான்சொல்வதேன்சொல்லுமூர்முற்றுமே. ( )

ஒப்பறுஞ் சீரருணாபுரிக்கோபுரத் தோர்முனிவ
னப்பதிக்காவல னுவல்கண்டஞ்சுக மாகியதுஞ்
செப்பரும்பொன்னகர்ப் பூக்கொண்டுமீண்டதுஞ் சேயறிய
விப்படியானது மாறெழுத்தாட லெனத்தகுமே. (எரு)

பிள்ளைக்கவித்தமிழ் முன் பகர்ந்தாற்குப் பெரும்புகழுங்
கொள்ளைக்கனகமுந் தந்துவிண்ணூரிற் குடியிருத்தி
வெள்ளைக்கயவர் குலவேர்களைய விடுத்ததுவுந்
தள்ளைக்குயர் கருணாகரவேலன் சடாக்கரமே. (எசு)

போரூரில்வந்த முனிவன்சடாக்கரப் பூசையினாற்
சீரூரவாழ்ந்தது மல்லாமலூறிய செம்பையெடுத்
தேரூரும் பொன்னெனச்செய்தான்முருக னெழிற்கரத்தாற்
காரூருநாளையி லேகாசம்போர்த்தவுங் கண்டனனே. (எஎ)

கந்தன்சடாக்கர மேதஞ்சமென்று கருதுமன்பா
லுய்ந்தண்டரூருக்கு மப்புறமாமந்த வூரிற்சென்று
செந்தழல் வேலுஞ் சிகிவாகனமுஞ் சிறக்கப்பெற்றும்
பைந்தமிழ்வாரிச் சுவைக்கேங்குவாரெண்ணில் பற்பலரே.

நால்வேதசார மறியாரெனினு நறுந்தமிழாற்
பால்வேலைப் புத்தமிழ்தாந்திருப்பாடல் பகர்பவர்தந்
நூல்வேணமட்டு முணராரெனினு நுடங்கலில்லா
வேல்வேடனாறெழுத் தோதலுற்றாரெனின் மெய்த்தவரே. ()

ஆறெழுத்தலங்காரம்

பூசைப்பெருக்கம தேதஞ்சமென்று புகன்றுமுயன்
றூசைக்கடற்சுழி சேராமலாறெழுத் தான்முருக
னோசைச்சிலம்பணி தாணினைந்தேத்தி யுருகுமன்பர்
வேசைக்கலவி வெறுத்துய்ந்துளான்றமிழ் வேண்டலென்னே.

கண்ணாரக்கண்டு முருகோனைப்போற்றிக் களிக்குநலம்
பண்ணாததாறெழுத் தென்றூற்பொதியைப் பருப்பதத்தில்
விண்ணாடர்மெச்ச விளங்குமுனீச்சுரன் விந்தகிரி
யண்ணாந்துநின்றதைச் செஞ்சுடர்க்காக வடக்கல்பொய்யே.()

ஏனத்தைவெற்றிவை வேற்படையாற்கொல்லு மெம்பெருமான்
ஞானத்தையீசற் கிரங்கியந்நாளி னவின்றசெவ்வேள்
வானத்தைக்காத்தருள் சேனாபதிதன் மலர்ப்பதமா
மோனத்தையாறெழுத்தாற் கண்டுதேர்ந்திடின் முத்தியதே.()

கல்லார்களாயினு மாறெழுத்தோதிக் கருத்துருகி
யெல்லாமுருகன் செயலேயென்றுன்னி யெதுவரினுங்
கொல்லாவிரதந் தவிராதுநிற்குங் குணத்தினரே
னல்லாரினல்லவர் தாமென்றுநாளுமென் னாச்சொல்லுமே.()

காளைப்பருவந் தவிராக்குமரக் கடவுளன்பர்
வேளைக்கிரங்கும் பிரானெழுத்தாறு மிகவுரைத்துத்
தேளைப்பொருவுங் குணத்தார்குலமறச் செற்றுமனக்
கோளைக்கெடுக்குந் தவம்புரிவாருடன் கூடுமினே. (௮௪)

ஆனைக்கழுத்தில் வருமுருகோன்றன தாறெழுத்துந்
தானைக்கடற்புவி வாழொருநால்வகைச் சாதிகட்கு
மேனைத்தவத்தினர்க் குந்தஞ்சமாமென் றியம்பலன்றி
யூனைப்பருகும்வில் வேடருங்கூறுத லுண்டென்பரே. (௮௫)

மின்னைவென்றுள்ள வடிவேற்குமரன் விரைமலர்க்கோன்
றன்னைமுன்னாள்விலங் கிட்டபிரான்றன் சடாக்கரத்தைப்
பொன்னையுமண்ணையும் பெண்ணையுநீத்துப் புகலுமன்ப
ரென்னையுங்கைக்கொள்வரோவென்றுநெஞ்சமிடைகின்றதே.

திருகியகார்நிறக் கோடிரண்டாற்பொருஞ் செந்தகர்மேல்
வருகுமரேச னெழுத்தாறுஞ்சொல்லி வணங்குமன்பர்
பொருகணைத்திண்கை விறல்வீரருக்கும் புலைக்கொடுமை
பெருகிடுந்தீநெறி யோர்க்குமஞ்சாவலி பெற்றவரே. (௮௭)

கூவிநின்றாடு மயின்மேற்றுலங்குங் குருபரன்றன்
னாவியென்றேபல நூல்சொல்வதாமெழுத் தாறுமுன்னிப்
பூவின்மின்னாக லாத்தனிப்பேறு பொருந்தினர்க்குக்
கோவிலும்பல்வகைத் தேவுருவுங் குறிஞ்சியதே. (௮௮)

கோணங்களாறுட் குடியாயிருந்த குறிப்பறிந்து
நாணஞ்சிறிதுமில் லாதெழுத்தாறு நவின்றவுணன்
பாணம்பொடியச் சினந்தசெம்மேனியைப் பார்த்திருந்தால்
வேணம்பதந்தரு வேமஞ்சிடேலென விள்ளுமன்றே. (௮௬)

சூலங்குலிசஞ் சரஞ்சாபம்வாட்படை தோற்பலகை
போலன்பர்கூறுவ வெல்லாம்புனையும் பொருப்புறழ்தோள்
வேலன்சடாக்கர மேதஞ்சமென்று விளம்புநரைக்
காலன்றொடப்படு மோவென்னுநூல்பல கற்கைநன்றே. ()

ஐவகைத்தேவரு மப்பால்விளங்கு மதுவுமொன்றாய்ச்
சைவமுற்கூறுஞ் சமையங்களாறினுஞ் சார்ந்துநிற்குந்
தெய்வமாதான முருகோன்சடாக்கரச் சீருணர்வா
ரெய்வதென்றென்பவை முக்காலுமில்லை யிகபரத்தே. (௯௧)

கன்றால்விளாவெறிந் தான்புகழ்வேற்படைக் கைப்பெருமா
னின்றாடுமாறெழுத் துள்ளத்திருந்து நெறியிலர்பாற்
சென்றாசைவார்த்தை பலகூறியேற்றுத் தினம்வருந்து
மென்றாழ்வொழிவதென் றோவன்றுதான்புவிக் கின்பமுண்டே. ()

கூதாளம்வெட்சி கடம்புபுனலி குராவனைய
போதாலருச்சித் தெழுத்தாறுங்கூறும் புனிதருக்கு
வேதாவைக்குட்டிய கைப்பெருமான்றனி வீரகண்டைப்
பாதாரவிந்தமல் லாற்பின்னைவேறு பதமில்லையே. (௯௩)

ஆகமங்கோடி யறிந்தாலுமாறெழுத் தாற்குறத்தி
பாகனைத்தெய்வப் பிடிகேள்வன்றன்னைப் பரவுகில்லார்
சோகமெல்லாந்தவி ராரென்றுநூல்பல சொல்லியுமிங்
கேகதிராமய மென்றுரைப்பாருய்வ தெவ்வண்ணமே. (௯௪)

வழங்குந் திருவெழுத் தாறுடையானெழில் வாய்ந்தமணிக்
கழங்கொன் றுகைக்குறப் பேதைக்கினிய கணவனென்று
முழங்குங்குரற்கிளிப் பிள்ளையைப்போலுய்யு மோகமுற்றார்
கிழங்கன் றியூனு நுகர்வேடர்சொற்கொளிற் கேடெய்துமே. (கூ௫)

அருவியங்குன்றங்க டோறுங்குலாவு மயிற்பெருமா
ளுருவியல்போர்ந்தெழுத் தோரா றுங்கூறிப்பி னுட்புறம்பாங்
கருவிகளியாவு மவனுகக்காணுங் கருத்திருந்தும்
பொருவிலஞ்ஞானப் பிணிநீங்கிடாரில்லைப் பூதலத்தே. (கூசு)

தோகைப்பரியின் மிசையேறுஞ்சண்முக சுந்தரனு
லோகைக்கடற்றரு மாறெழுத்துண்மையை யுன்னியப்பாற்
பாகைப்பொருந்தமிழ்ப் பாடிநல்லோர்தம் பரிவொழித்துச்
சோகைப்புகழ்கொடி யோர்குலநீறச் சுடுகைநன்றே. (கூஎ)

எல்லாக்கடவுளு மோர்வடிவாகி யிருந்தசெவ்வே
ளல்லாமற்றெய்வமு முண்டென்னுமூடருக் காறெழுத்தேன்
கொல்லாத்தவநெறி யேன்பெரியோர்தங் குழாத்துறவேன்
பொல்லாக்குணத்துமின் னார்மொழிகேட்பது போதுமன்றே.

வென்றிவைவேற்பெரு மானெழுத்தாறும் விளம்புகின்ற
தன்றிமற்றொன்றையு நாடாதிருக்கு மருந்தவர்தாங்
குற்றினைப்போலத் தனங்கிடைத்தாலுங் கொடுத்தழிப்பார்
தென்றிசைக்கோன்வந் தெதிர்த்தாலும்வென்று செயங்கொள்வரே.

ஆறெழுத்தலங்காரம்

அறிதற்கரிய முருகோன்றன்னாறெழுத் தாணையொரு
குறிவைத்துநாடுமென் பாற்பலவாறு குலாவியுண்மை
நெறியுற்றபைங்கிளி தானீயென்றோதிய நிச்சயமே
பொறியிற்கிடந்து பிரகாசிக்கின்றது போவதன்றே. (எ)

முற்றிற்று.

நூற்பயன்

பழுத்தமதுரத் தமிழ்ச்சீருணர்ந்துள்ள பாவலவர்
வழுத்தமகிழு முருகோன்முன்சோண வரைக்கருகிற்
கொழுத்தமுகில்வருங் கோபுரத்தியானின்று கூறிடுமா
றெழுத்தலங்காரம் படிப்பார்க்குமில்லை யெழுபிறப்பே.

தெய்வமேதுணை.

முருகக்கடவுடுணை

முருகானந்தலகிரி.

காப்பு

தனனு தந்த தனதனு

முருகானந்த லகிரிநூன் மொழிவேனின்சொல் வணிகமா
னருகாயங்கை யுதவுவா னடியார்சிந்தை மகிழவே
பொருகால்கொண்ட துவசமே புயன்மாலொன்று குதிரையே
யிருகாலென்று மயிலினே டெளியேன்முன்பு திகழ்மினே.

நூல்

தனனதனதனனதன தனனதனதனனதன தனதானனு

சுருதிபலபகரளவில் சமயநெறியினுமருவு சுகமியாவுமா
வருபரமரகசியமெ னெருநிலையை யுதவுபொருண் மடியாததா
விருமகளிரருகமைய மயின்முதுகிலயில்கொடம ரெழில்வீறுதோய்
முருகனெனவெனதுவிழி யெதிர்நிலவுமனவெளியின் முறைபோலவே. (க

தானதனதானதன தானதனதானதன தானுதனு

நீடுமறிவாளர்குரு சேவைவிழைவாரவரு ணோர்தீர்வலோ
ராடுமதவேழநிக ராகுமெனவூர்பவன தாளாகினோர்
சூடுமதியான்மலைய நாதனுறவாரெயினர் சூழேனல்வாய்
காடுகமழ்தாள்குலவு வீடுபெறுவார்பிறவி காணார்களே. (உ)

தனதானதனதான தனதானதனதான தனதானனு

மயிலாடுகளிறுய பரிநீர்களமர்வீர மலிசேவல்வீ
றயின்ஞானமிருமாதர் செயலாசைசிறுதாள்க ளரன்வேதனூல்
பயில்வீடுமுகமாறு திசைதோள்கணெறியீடில் பரமானதே
வெயின்மேனிமுருகோனெ னிசமோர்தலரிதோரில் வினைநீறுமே.()

தந்ததனதந்ததன தந்ததனதந்ததன தந்ததனனு

அந்தமுதலின்றிநிறை யும்பரமெனும்பொருளை யன்பர்பலபேர்
தந்தநினைவின்படிவ ணங்குமுறைவம்பலம தங்கடொறும்வாழ்
செந்தகையனந்தமுமொ ருங்குணர்தரும்பெருமை சிந்தையடையா
தெந்தமதுகந்தனைவி ரும்பில்வருமென்பவர்மு னிந்திரர்களே. (ச)

தத்ததனதத்ததன தத்ததனதத்ததன தத்ததனனு

சித்தருணர்சற்குரும றச்சிறுமியைப்பரவு செட்டியெனல்போன்
முத்தமிழ்தொடுத்தணியும் வித்தகர்வெறுத்திடினு முற்றுமுறவாய்
நித்தம்விழிமுற்கனவி னிட்டையினகைத்தருகு நிற்குமுருகோ
னெத்தனைவிதத்துருவெ டுப்பவனெனக்கருதி லெய்க்குமனமே. (௫)

தானனதானன தானனதானன தானதனு

பாமாலைசூடாசை மாறுதவேணையர் பான்மேவினல்
வேமாயைதீர்ஞான வீடாளலாமார வேள்சேனையே
யாமாதர்தோள்சேரி னேய்தோயலாமீதை யாராய்கிலீர்
போமாயுண்மாகோப மாரேமனூர்தூதர் போர்நேருமே. (சு)

தானந்ததானந்த தானந்ததானந்த தானந்தனு

நீலங்குலாவுங்க லாபங்கொண்மாவின்க ணோர்கந்தவேள்
வேலங்கையேதஞ்ச மாமென்றிராநெஞ்ச மேமுந்துநாண்
மாலஞ்சுசூர்பொன்ற லானுய்ந்தவூர்கண்டு வாழும்பர்கோ
னுலங்கொர்பூவும்பெ ருவந்தநாதன்சொ லாய்நன்கரோ. (எ)

தானத்ததானத்த தானத்ததானத்த தானத்தனு

தீயக்கமார்நெற்றி யான்முற்சொல்சீர்பெற்ற சீடர்க்கொடீர்
ஞாயத்தையேசெப்பும் வேன்முத்தனுர்சுத்த ஞானத்திலே
மாயக்கனுரிச்சை யாலெப்த்துளேனுக்குள் வாழ்க்கைக்குமா
நேயத்தொடாடற்பொய் பேசற்குநாணற்ற நீர்துற்றதே. ()

தனதந்ததனந்த தனதந்ததனதந்த தனதந்தனு

அரனங்குபரவுஞ்சண் முகனன்றிமறுதஞ்ச மறிகின்றிலீர்
பிரமன்கையெழுதும்பொய் விதியஞ்சுமதனைந்து பிரசங்கொள்பூ
வரவஞ்சுமெமதண்ட வலியஞ்சுமெனநம்பி மயிலின்கண்வே
லுரமொன்றவவன்வந்து திகழ்கின்றதினமொன்று முளதிங்கரோ. ()

தனதத்தனதத்த தனதத்தனதத்த தனதத்தனு

மறைநித்தமெனன்மெய்ச்சொ லெனிலப்பல்பகுதிக்குள் வடிவைத்தவே
விறையைச்சொல்வனபொய்ப்ப வலவப்படியிருக்க விகன்முற்றுசூர்
தறையிற்பொனுலகிற்செய் துயரற்கமுயலத்தர் தவநெற்றிமீ
துறையக்கவழிபெற்ற விதமுத்தொடுசித்த ருணர்கிற்பரே. (௧0)

வேறு

தனனதந்ததன தனனதந்ததன தனனதந்ததன தனதன

வயமிருந்தகதிரயிலணிந்துபலமலைதொறுங்குலவுமுருகவேள்
கயமிரண்டனைய முலைகொளுங்கவுரி கணவனன்றுதவ முயல்வதா
லுயருமங்கிவிழி வழிவரும்பெருமை யுவன்வணங்கலினு முணர்கிலார்
தயாதன்புதல்வ னெனமுகுந்தன்வரு தலையெவண்புகல நினைவரே.

தனனதத்ததன தனனதத்ததன தனனதத்ததன தனதன

மலைகளிற்பெரிய தலமுநட்டமிடு மயில்வனப்பினுயர் பரியுமா
வலைகடற்புனலொ டறவொறுத்தகதி ரயிலின்மிக்கபடை யதுவுமோர்
தலைவனுற்றிடினு மலையவெற்புதவு தமிழிலக்கணமொ டௌபனூல்
கலைமகட்குரைசெய் முருகனைத்தொழுது கதியிரப்பவரொமுறவரே.

தத்ததத்ததன தத்ததத்ததன தத்ததத்ததன தத்தன

அக்குமிக்கணிப வர்க்கொர்மெய்ப்பொருள ளித்தரிக்குலக ளித்தசீர்
தக்குறக்கரிமு கற்செகுத்துவிதி தக்கம்விட்டழவொ றுத்தொரேழ்
மைக்குலப்பரியி னற்குவிட்புலம்வ குத்தெழிற்சிகியு கைத்துவேல்
குக்குடக்கொடிபி டித்தகைக்கடவுள் கொற்றமெய்ப்படிவி ரிப்பதே. ()

தானதந்ததன தானதந்ததன தானதந்ததன தானன

வேதமுஞ்சகல வாகமங்களும்வி ராவிநின்றபொருள் வேனில்வேள்
சாதல்கண்டமுனி வார்முகந்துமகிழ் தாமமன்[illegible]ர்புனை சாருவா
நாதனின்கவியு நீபமுங்குரவு ஞானமுங்கமழும் வீடுவார்
காதளந்தவிழிவேடமங்கையமர் காணிடஞ்செல்கிறுதாள்களே

தந்ததந்ததன தந்ததந்ததன தந்ததந்ததன தந்தனு

அங்கண்மிஞ்சுசட லங்கொளிந்திரனு மண்டருந்துறவரும்பொனோர்
பங்கயந்தருவி ரிஞ்சனுந்திதிசெய் பண்பனுஞ்சிவனும் விஞ்சையோர்
தங்கணங்களும்வெ குண்டெழும்பலம தங்களுஞ்சுருதி யுங்கெடா
தெங்கணும்பரவி நின்றவொண்பரமு மெங்கணெஞ்சிலுறை கந்தனே.

தத்ததானதன தத்ததானதன தத்ததானதன தத்தனு

பத்தியேயுயர்வெ னக்கொள்வார்களது பக்கமேவியவர் சொற்றவா
றுத்திதோய்தரந டக்கையேதுமில னுட்பொலாமனநி னைப்பதேன்
மெய்த்தியானபரர் சித்தியாவுநிகழ் மிக்கஞானமுற விட்டுவாழ்
சத்திவேன்முருக னைப்புராவுமொரு தத்தைபோன்மகிழ்வி தத்தையே

தய்யதந்ததன தய்யதந்ததன தய்யதந்ததன தய்யனு

மைவனங்குலவுமெய்கொளிந்திரர்கண்மல்லலும்பரிடைவைகலா[வேல்
லுய்வடைந்தமரர்துள்ளவன்றகுவரொல்லைபொன்றவமர் வெல்லும்
வைவருங்கலைமிஞெல்லுமந்தணன்முன்வள்ளல்பின்பகருமெல்லையா
மைவரும்பரவுசெல்வியென்பர்முருகையனன்புமுதிர்துய்யரே. (கஎ)

தத்ததந்ததன தத்ததந்ததன தத்ததந்ததன தத்தனு

சத்தியுஞ்சிவமு மொத்தமைந்தபர தத்துவன்குகனெ னச்சொலார்
பத்தியும்பொருளெ னக்கினூளுங்கருணை பற்பல்குன்றி னுநடித்தசேய்
புத்தியின்கணுறு மற்புதந்தனையொர் பொற்புறுங்கவிமுனற்றைநாண்
முத்தியின்பமருள் சொற்பிறங்கும்வழி முட்டையென்றமையு ணர்த்
துமே. (கஅ)

முக்கணன்றமிழ கத்தியன்றெளிய முற்சொலும்பிரண வத்தையோர்
கைக்கணிந்தகிளி யிற்கும்விண்டகுரு கற்பகந்தருநி ழற்கண்வாழ்
மிக்கவன்றனரு மைப்பெணெஞ்சுருகிமெச்சியின்பமயில்வுற்றும்வாண்
மைக்கருந்தகைம றத்திபங்கயம லர்ப்பதந்தொழல்வ ழக்கதே. (கக)

தன்னதத்தன தன்னதத்தன தன்னதத்தன தன்னனு

விண்முகத்துமகன் மண்முகத்தும்விட வெம்முகத்துரகர் துன்னும்வாழ்
வண்முகத்துமுள தன்மைமுற்றுமெணி லன்னமுய்ப்பவனைமுன்னொர்நாள்
பண்முகச்சுருதி சொன்முகப்பினுரை பன்னெனக்கறவும்வண்மைதோய்
சண்முகக்குமரனென்னுமெய்க்கடவுள் சந்நிதிப்பெருமையுண்மையே.

வேறு

தானதானன தானதானன தானதானன தானனு

பாதிவாண்மதி சூடினானிசை பாடும்வாய்மழ பாலனு
ராதியோர்சிலர் மீதொவோர்கலை யாரவாடிய சேயலா
லேதில்வானவர் பாலென்மால்சிறி தேனுமேவலு றுதிதே
ரீதியாமென வோதுவாரரு ணேயஞானவி னோதரே. (உக)

தனனதந்தன தனனதந்தன தனனதந்தன தனதனு

அறமுமிஞ்சிய பொருளுமின்பமு மழிவரும்பர கதியினோ
டுறவிழைந்துபல் விதமுயன்றுள முழல்வுறுந்துய ரொழிகிலீர்
திறன்மலிந்தப னிருபுயன்புணர் சிறுகருங்குயி லனையதோர்
குறமடந்தைகை மதலையென்றொளிர் குரவர்தம்பணி புரிமினே. ()

தனனதானன தனனதானன தனனதானன தனதனு

குரவனுமுயர் பெயர்வழாதலர் குரவமாலிகை புனையும்வேள்
கரவுதோய்சிலர் குறவனேயெனல் கழிவுருவகை கருதலான்
மரமுமாய்வன சரமினுண்முலை மருவிமால்வரை மிசையெலா
முரசநீடொலி தருவிழாநட முயல்வதாமெனன் முறைமையே. (உரு)

தந்ததானன தந்ததானன தந்ததானன தந்தனு

மன்றுளாடினர் பன்றியோடமர் வன்பனும்விசை யன்றனேர்
சென்றுவேடரி னின்றுவார்புனல் சிந்தமோதடி யுண்டுமீ
ளன்றுபார்வதி செங்கைமீதில மர்ந்தவாசனை மிஞ்சியே
குன்றுதோறமர்கந்தனேனல்கொள்கொம்பனுளைமணந்ததே.

தானதாத்தன தானதாத்தன தானதாத்தன தானனு

ஞானவாழ்க்கையு மாய்வில்கீர்த்தியு நாவினுற்றமிழ் பாடுசீ
ரானவூக்கமு மீயுமாட்சிமை யார்சடாக்கர மோதினுன்
மானவேற்படை மேவுதோட்குகன் வாவுதாட்சிகி மீதிலே
கூனல்வாட்கர வீரர்நாப்பணுர் கோழிகூப்பிட நேருமே. ()

தந்ததானன தந்ததானன தந்ததானன தந்தனு

தொண்டுளார்பலர் தங்கடேவுயர் துங்கமேயதெ னுஞ்சொலே
விண்டுபோர்செயல் கண்டுமியாவர்வி ளம்புமாறும்வி ளங்குசீர்
கொண்டுவாழ்பா முண்டதேநிலை குன்றுறுதென நம்புநீர்
தண்டுவேல்புனை செங்கைதோய்தரு தந்தையார்தர வந்ததே.

தத்ததானன தத்ததானன தத்ததானன தத்தன

பற்பலாயிரம் வெற்பிலாடல்ப யிற்றுதாள்கள்ப டைத்தசே
யற்பனேபர வத்துவோபக ரற்கொணுதவி தத்தனே
சொற்பணுதியி லுற்றெனேடுசொ லத்தகாதன சொற்றவா
நிற்பவாகமு டிக்குநாளினி லத்துளார்களு ரைப்பரே. (உஎ)

தந்ததாந்தன தந்ததாந்தன தந்ததாந்தன தந்தன

தந்தையாங்கொரு வன்சொல்வேண்டுபு சங்கைதீர்ந்தது மன்றுதாய்
சிந்தைநாண்கெட வுண்டிதான்கொடு சென்றுமீண்டது முந்தினேன்
விந்தைதோய்ந்தப ணங்களீந்தது மிஞ்சுமாண்பெனில் வென்றிவே
லெந்தையான்பல தொண்டர்போன்றரு ளின்பமாந்தவ ழுங்குமே. ()

தானதந்தன தானதந்தன தானதந்தன தானன.

வீரவெஞ்சின மீறுசெங்கதிர் வேலெறிந்தவுணேசன்வா
ழூரடங்கலு மாயவென்றுவி ணோர்களிந்திர ஞதியோர்
சேரநின்றுப ராவமின்பொரு தேவகுஞ்சரி யாளொடோர்
பாரவெண்களி றூர்குகன்சிறு பாலனென்கைய நீதமே. (உகூ)

தானதத்தன தானதத்த னதானதத்தன தானன.

சூதமற்றம ராபதிச்சுரர் சோர்வறப்பொரும் வேல்கொள்சேய்
மாதளர்ச்சிவ யோதிகத்திரை வாய்நடுக்குட லாளரா
மேதமிக்கொரு கோல்பிடிக்கமு னேனலிற்செயல் கேண்மினே
கூதளத்தொடை வேடருக்குயர் கோன்வளர்த்தபெண் மோகமே. ()

வேறு-

தானன தத்தந் தனதனனா.

ஈடில்புகழ்ச்செங் கதிர்வடிவே லேறுமெழிற்றிண் புயமுருகோ
னுடிவசிக்குங் கிரிதொறுமே யார்வம்விளைக்குந் தமிழ்பொழிசீர்
நாடியுளுற்றுந் தவமிகழ்வார் நாவினிடத்துங் குடிகொளுமோ
கேடின்மறைப்புங் கவன்மகிழ்கூர் கேளிநடத்துங் கிளிமொழியே.

தந்தன தந்தத் தனதனனா

அன்றவுணன்கொக் குருவுறலா லண்டரிரங்குற் றமைதவிர்வான்
வென்றகுகன்சற் குருவெனவே விண்டுதுணிந்தப் படிமுயல்சீர்
மின்றருசெஞ்சத் தியைமுகின்மான் மிஞ்சுசிகண்டிப் பறவையைமே
னின்றதிர்வெண்குக் குடமுடனே நெஞ்சில்வரைந்திட்டவர்பெறலே.

தனதன தத்தந் தனதனனா

பாவைவிருப்பந் தருகெனவே பரவுகவிச்சுந் தரனொருநா
ளிரவினின்மிக்கின் புறவிடுதூ தெனவுநடக்குங் கருணையினோர்
குரவனெனக்கும் பிடவருசேய் குளிர்மதுரச்செந் தமிழ்விழையா
முரணுறுதுர்ச்சிந் தையனெளிலியார் முறையெனவொப்புந் தகையி
[னரே.

தனனதனத்தா தனதனனா

வடமொழியிற்றேய் தருமொருநூல் வடிதமிழிற்பே சியபுலவோ
னுடனமுதட்டூர் வழிநடைகூ ருமையவள்கற்பால் வருமகவே
னடமிடுபொற்பார் மயின்முருகோ னமதுகவிக்கே னருள்புரியா
னிடர்படல்விட்டார் வமெய்திடுவீ ரியல்புபிழைத்தால் விதிவசமே.

தந்ததனத்தந் தனதனனா

உண்டிமிகத்தந் தவர்பெறவே யொண்கருணைச்சிந் தருள்களிறே
டெண்டிசைசெப்பும் படிவருசே யின்றமிழ்நத்துங் கொலென்மருளீர்
வெண்டிருநித்தந் தொழமுது நூல் விண்டயன்வெட்குஞ்செயல்புரியா
தெண்டிரையுட்கொண் டவன்முதலோர் செஞ்சொலுவக்கும்பெரு
[மையனே.

தானதனத்தன தனதனனா

நாலுமறைப்பொருள் பகர்வழியே ஞானவிளக்குத வருண்மதமா
றாலும்வழுத்திய சிவனுமைமா லானைமுகத்தினன் வெயிலவன்வேண்
மேலுலகத்திமை யவருயவோர் மேனியிலத்தொகை முகமுறுநாள்
வேலுயர்வுற்றது மறிகிலர்பால் வேறியல்பெப்படிநுவல்வதுவே. ()

தந்ததனத் தய்யனதனனா

மந்திரமெய்த் தெய்வமொடரசாய் வஞ்சகரைக் கொல்புகழ்மலிவான்
வந்தியர்சொற் கொள்குகன்விழிநேர் வந்தொளிரச் செய்தவமறியீ
ரந்திபகற் புல்வயினுளரீ ரங்குதொழச் செல்வ்துநலமே
செந்தினைமற் பல்கிரியடியார் சிந்தையினுக் கொவ்வுவவலவே. (௩௭)

தத்தனதத்தத் தனதனனா

முத்தமிழ்கற்றுத் தெளிவடையார் முற்றுதிசெப்பிக் கனமிடியா
லெய்த்தலைதற்கொப் பியபுலவீ ரித்தொழிலைக்கைத் தெழின்மயிலூர்
சித்தனைமெய்ப்பத் தியொடுணர்வீர் சித்தமுழுக்கத் தெரிபவனுன் ()
மத்தகவெற்பொத் துலவடியார் மத்தியில்வைத்துக் கதிதருமே.

தந்ததனந்தந் தனதனன

வஞ்சமிகுஞ்சிந்தையர்களிகூர் வம்பின்முயன்றிங்குழல்சிறியே
னெஞ்சமுநம்புஞ் சரவணவே ணின்றுளகுன்றந் தொறுநனிபோ
யெஞ்சலிலின்பம் பலபெறலா லிண்டினெருங்கும் புலநெறியோர்
வெஞ்சமர்வென்றுய்ந் திடநினைவார் விண்டுவிரும்புந் தகையினரே. ()

தந்ததனந்தன தனதனன

தொண்டகவண்பறை யொலிதருசீர் துன்றுகுறிஞ்சியி னடமிடுதாள்
கொண்டகுகன்றிருவருள்விழையார் கொஞ்சநறுந்தமிழறியினும்வேள்
சண்டனயன்றொடர் பறமொழியார் சந்தையிடம்படு ஞமலியெனா
வண்டரிடைஞ்சலி னிடைதளர்வார் மங்கலருங்கலி வலிமிகவே. (சo)

வேறு

தந்தனதானன தந்தனதானன தந்தனதானதன

பங்கயனார்தலை யுண்கலமாய்முரல் பைந்தொடியார்படைவே
ளங்கவெணீறணி சந்தனமாயட லந்தகனுவிகொள்வார்
தங்கண்முனருள் கந்தனைநாடுநர் சஞ்சலமாகுவரோ
வெங்கருவாதனை பொங்குறுகாமம்வி யன்றருசாவெணியே.

தானனதந்தன தானனதந்தன தானனதந்தனன

பூரணசந்திரர் கோடிதிரண்டெழல் போல்வெளிறுங்கவினர்
வாரணமொன்றிய கேதனபுங்கவன் வார்கழலன்புடையார்
நாரணனென்றகல் பூமிசொலும்படி நாகரிகம்புரியா
வாரணவுஞ்சடை யானெனவிண்புக வாசைகொளுஞ்சிலரே.

தத்தனதானன தத்தனதானன தத்தனதானதனா

சத்துவசீலரி டத்திகல்வார்தலை தத்துறமோதடல்வேல்
வைத்துவிணுடுபு ரப்பவனேகதி மற்றிலையாகையினா
னத்துமென்மேன்மையி கழ்ச்சிமுனாகந விற்றவயாவுமனோ
னெய்த்துணர்நீபம ணக்கும்விசாலநி ரைப்புயமீதுறுமே. ()

தானனதத்தன தானனதத்தன தானனதத்தனனா

வீடுறழ் பொற்பொடு நீடுதமிழ்க்கிரி மேவுமகத்தியனார்
பாடுமிசைக்கருள் செய்புகழ்சொற்றுயர் பான்மையினிற் பழகீர்
காடுசெடித்தொகை யாதியவற்றெழில் காணுறுகற்பனையீர்
கூடுவிடச்சொலி யேமனுறுக்கிடு கோபமிகக்கொடிதே. (சச)

தந்தனதத்தன தந்தனதத்தன தந்தனதத்தனனா.

இந்திரனொப்பவர் தங்கள்பதத்திலி ருந்துகளிப்புறுசீர்
வந்திடிலொப்புகி லன்பலவெற்பின்ம ணங்கமழ்சிற்றடியே
முந்தியமுத்தியெ னுந்துணிவுற்றுமு ழங்குதமிழ்ப் பொழிசீ
ருந்தியபத்தர்நெ ருங்குமவைக்கரு கொன்றும் விருப்புளதே.

தனதனதனதன தனதனதனதன தனதனதனதனனா

பலவிதநயமொழி கொடுமயல்வலையிடு படிறிகளுறவதனா
லலகறுதுயருறு மொருவனையருணையி லருளியபுகழ்முருகோ
னிலகொளிதருபுரி தியின்மயின்முதுகினிலெதிர் வரவழிபடுவார்
மலரவனறிவரு பிரணவரகசிய மகிமையையுணர்வரே. (சகூ)

தானனதானன தானனதானன தானனதானதன.

மாமறையோவரு ளாகமமோபல மால்வரையோகுகையோ
காமருசாரலி னேனலமேதாசிவ காமிதன்வார்கரமோ
நேமம்விடாமுனி வோர்தவமோவிரு நேரிழையார்நடுவோ
பாமலிசாருநி லாவியதோள்பெறு பாலகன்வாழிடமே. (சஎ)

தத்தனதத்தன தத்தனதத்தன தத்தனதத்தனதன.

அத்தியுரித்தவர் பத்தினிகைக்கிடை யற்றைவசித்தவளோர்
சத்தியுருக்கொடு வெற்றிமலர்க்கைத னிற்குலவப்பெறுசேய்
சித்தியைமுத்தியை நத்தியபத்தர்கள் சித்தமதைக்கவரா
மைத்திமிரத்தைய றுத்தபினப்படி மற்றவருட்படுமே. (சஅ)

தந்தனதந்தன தந்தனதந்தன தந்தனதந்ததன.

எஞ்சமையம்பக ரும்பொருள்வண்பர மென்றிகலும்பலபேர்
தஞ்சமையின்கண தொன்றலதின்றுத வம்புரியும்பெரியோர்
நெஞ்சநினைந்தவி தங்கள்பொருந்தநிறைந்ததெனுந்துணிவார்
குஞ்சரமும்பிணை யுந்தருமங்கையர் கொண்கனைநம்புநரே.

தானனதய்யன தானனதய்யன தானனதய்யதன

தேசிகருள்வட நீழலில்வைகினர் சேவைசெய்வல்லவனு
மாசிவர்கள்வருள் வேடுவர்செல்விகை மானுகர்புல்லியனு
மாசியும்வெளவுந ஞன்முகனேல்குற வாறிருகைகளினல்
வீசியொர்பள்ளமி ஞலவிர்செவ்வுடன் மீதடிகொள்பவனே.

வேறு

தனனத்தனனத் தனனத்தனனு

கனவிற்பலசொற் றகணக்கொழியா
துனதற்புதமொற் றையுணற்றிலையா
னெனதற்கையினித் தரனிச்சயமோ
பனகத்தினடித் தபரிக்குகனே. (ருக)

தனனந்தனனந் தனனந்தனனு

ஒருபைங்கிளியன் றுணரொண்பொருளே
தருகென்றுதவஞ் செயல்கண்டிலையோ
குருவென்கவருந் திறல்குன்றியதோ
மருமிஞ்சுகடம் பணிவண்புயனே. (ரு௨)

தனனுதனனு தனனுதனனு

உனையேமறவா துணர்சீர்மையினல்
வினைமாசறுமோ மிகுமோவுரையாய்
பனைநேர்துயர்தோய் பரிசோர்கிலையோ
வனையாம்வடிவே லமர்தோளரசே. (ருந)

தந்தத்தனனத் தனனந்தனனு

என்றற்குனருட் செயலின்றெனில்யா
னென்றற்புகழாப் பிவணங்குவரோ
தென்றற்கிரிமுற் றருசெந்தமிழ்மா
லொன்றப்பலவெற் பினுறைந்தவனே. (ருச)

தன்னந்தன தன்னன தந்ததனா

மன்னுந்தமிழ்வண் மை யறிந்துளநீ
யின்னுஞ்சிறிதென் னைவிழைந்திலையே
பன்னுந்துதிநின் னதுபண்பலவோ
பின்னுஞ்சடையண் ணல்பெறுஞ்சுதனே. (ருரு)

தனனாதனனா தனனத்தனனா

விதியார்தலைமீ திலெழுத்திடல்போய்
மதிபோன்மகிழ்வாழ் விலமைத்தெனையாள்
கொதிவார்கடல்கோ வெனவட்டென்மீள்
கதிர்வேல்புனைகா ரணசற்குருவே. (ருசு)

தந்தத்தனனந் தனனத்தனனா

எந்தப்பொருள்வந் தெதிருற்றிடுமோ
வந்தப்படிவிண் டணியத்துணிவே
னிந்தக்கவிவம் பெனவிட்டெறியேல்
கந்தக்குரவங் கமழ்சிற்பரனே. (ருஎ)

தனனத்தனனா தனனத்தனனா

பலகற்பனைபா டல்பழித்துனதா
ளிலகத்துதிகூ றுமெனக்கினிநீ
மலமுப்பிணிதீர் வகையைப்புகல்வாய்
கலகச்சமண்வேர் களைவித்தவனே. (ருஅ)

தனனத்தனனு தனதன்னதனு

அரிதிட்டிலையா யினுமன்னைபிதா
வுரிமைக்குரியா னெனவுன்னல்விடேன்
விரிகற்பகநீ ழலில்வெண்ணிறமார்
கரிபெற்றவள்கா முறுசண்முகனே. (ருகூ)

தனனந்தனனு தனனத்தனனு

முன்னம்பலவா மொழிசொற்றனையா
லுன்னன்பொருநா ளுமொழிக்கறியே
னன்னம்பரியா மயனுட்பகையா
லின்னம்பிறவா மலியற்றுதியே. (கூ0)

வேறு.

தனனதந்தன தனதனதனதனு

அருணனொஞ்சிய நிறமுமொண்மதியநே
ரறுமுகங்களும் விழிசெவியமுதவாய்
மருவுபொங்கமு நிரைபடுபுயமுநூன்
மருமமும்பல மலைதொறுநடம்முரு
விருபதங்களு மயிலயின்முதலவா
மியல்புநெஞ்சிடை குடிகொளநினைகுவார்
சருவதந்திர வலிகொடுநிலவலோர்
சரதமென்றரு மறையினநுவலுமே. (கூக)

தானதந்தன தனதன தானனு.

வேலணிந்தகை முருகனைநாடுறு
வீணருந்தமிழ் விரகினராகுமா
றுலவெஞ்சின வமணர்கணூலெலா
மாய்தல்கண்டன வறநகையாடுவார்
மாலடைந்துபன் மலர்பொழிசோலைமேல்
வாவுதண்சிறு வளிவரைநாதனூர்
போலருந்தவ வலிகொடுவானுளார்
போகம்வம்பெனல் புகல்கவுமாரரே. (௬௨)

தனனதந்தனத் தனதனதனதனு

கயிலையங்கிரிப் பரமனையனையதோர்
கணைவிடுந்திறற் கரிமுகன்வெருளநீ
டயிலிருந்தகைத் தலமிசையதுவரா
வமையுமன்றுசற் றகமகிழ்முருகவேள்
பயில்கையொன்றுதப் பிடல்றுமிளவனோர்
பகையிகழ்ந்திடற் றெரிதலினுதவினன்
மயிலில்வந்தளித் திடுநினைவடையினே
மதுரவண்டமிழ்ச் சுவையுணர்வருளுமே. (௬௩)

தானதந்தனத் தானனதனதனு

ஆதவன்றனைத் தானவர்தடைசெயா
ரார்தருந்துயிற் போயெழுமுயிரெலா

மாதவஞ்செய்மிக் கோரினமுவகையா
மாரன்வஞ்சகப் போர்செயும்வலிமைபோம்
வேதன்வந்தபுட் பாதிகண்மலரும்வான்
மேவுமும்பருட் சோர்வறும்விதிர்வைவேல்
கூதளங்கொண்மற் றேருள்பெறுமுருகவேள்
கோழியொன்றுகுக் கூவெனமுரலினே. (கூச)

தத்ததத்தனத் தனதனதானனு

சித்தர்பற்பலர்க் கருள்செய்குமாரவேள்
சிற்பரத்தனிப் பொருளெனவோர்கிலீ
ரத்தகைக்குரித் தவனலனுகிலா
றக்கரத்தினைக் கருதியபேரெலாம்
வித்தகத்தமிழ்க் கடல்பெறுவார்களோ
விட்புலப்பகைத் தகுவர்கண்மாய்வரோ
பித்தன்முற்சொன்முத் தலைவர்கடாழ்வரோ
பெத்தமற்றமுத் தியிலுறநேர்மினே. (கூரு)

தானதந்தனந் தானனதனதனு

நான்முகன்பரந் தாமன்முனிகலியே
நாகமண்டலம் பாதலம்வெருவுபோ
ரான்முரண்கொள்வம் போவுறநடுவினீ
டாதிதந்தமென் சேயெனுமவருடா

மேன்மைகுன்றருந் தேசிகனெனவனோர்
வீழுமெந்தையென் பார்களுமிழிவுறு
மான்மியஞ்செய்குன் றுயிரமுடையவேண்
மாரனெஞ்சுறுங் கோமளவடிவனே. (௬௬)

தனனதத்தனத் தனதனதந்தன

கருணையற்றபொய்த் தவமுயல்கின்றபேர்
கவிதொடுத்திறப் பவரையிரந்துளார்
தருமசித்தமெட் புரையவுமொன்றிடார்
தமநியத்தைமெய்க் கதியெனநம்புவா
ரருமறைப்பொருட் பெரிதிகழ்வம்பர்பா
லறனெதிர்த்திடிற் சரவணனன்புதோ
யொருதிருப்புகழ்ச் சொலியமர்வென்றுவீ
டுறுநிசத்தைமிக் குலகமறிந்ததே. (௬௭)

தந்ததானனத் தனதனதத்தன

அந்தநாண்மிகக் கருகியசொற்களா
லன்பிலானுரைத் திடுபனுவற்கும்வேல்
வந்தவாமுடித் திடவிடுநட்பினன்
மந்தமாருதக் கிரிமுனிசொற்றவா
சந்தநாவிரட் டியுமுணர்வித்தையோர்
தங்கள்வாயிசைத் தமிழ்மையுநத்திலா

ணிந்தநீரெழிற் கிளிசெவிதொட்டதோ
ளின்கணேறுமத் தினமுதலுற்றதே. (௬௮)

தனன தானனத் தனதனதனதனா

அயில்குலாவுகைக் குகனதுசெவியெலா
மருணைவாழ்கிளிக் கவிகவர்விதமுனா
வெயிலில்வீழ்புழுப் பொருதுயருறுமெனேர்
வினையுளீரவற் புணரிருவனிதைமார்
மயிலொடோதுமுப் பரிகொடிமிசைகுலாம்
வலியசேவலுற் றுளனவுமவணதே
பொயிலதாமெனக் கொளினுமதுரைசெயோர்
புனிதவாயினைப் புகழ்வமுய்வடையவே. (௬௯)

தானதன்னனத் தனதனதாந்தனா

ஞானவண்மையிற் பெரிதருளோங்கவோ
நாசமின்மைபெற் றுயர்புகழ்தாங்கவோ
கூனல்வெண்மதிச் சுமைதலைநீங்கவோ
கோதில்பொன்மயிற் பரியினைவாங்கவோ
பானலன்னகட் சிவையிதழ்மாந்தவோ
பாவபுண்ணியத் தினநிறைதோன்றவோ
வேனமன்னமுற் றெரிவரிதாம்பிரா
னீடில்சண்முகக் கடவுளைவேண்டலே. (௭௦)

வேறு

தனனதனத் தனனதனத் தனனதனத் தனனு

குமரன்மலைத் தலைதொறும்விற் குறவர்தவத் தினர்வா
னமரர்தொழக் குடிகொள்வழக் கமணர்முதற் றெரிவார்
தமநிலையிற் பிழைபடுதூர்த் தகையினர்சிற் சிலர்போ
லெமதுநெறிக் கடவுள்வசிப் பிடமெனன்மிக் கினிதே. (எக)

தனனதன தனனதன தனனதன தனனு

கருமுகிலை யனையவரி கழல்பரவு முனியா
மொருவனெழி லுரககிரி யுழிசெய்பிழை யுணர்வீ
ரருள்வலிமை முழுதுமறி னுமவர்களிக ழினும்வேன்
முருகனடி யவரவண முறைதவறு கிலரே. (எஉ)

கடவுளில னெனுமவர்கள் கழியவுள னெனுமோர்
திடமருவி யருளுடைமை திகழ்தருப லருமா
நடனமயின் மிசையுலவு நமதுகுக னடியா
ருடனுறவு கொடுமகிழு முயர்விலமை பவரே. (எங)

தானதன தானதன தானதன தானு

ஆறிருபு யாசலவி சாகனடி யார்தாம்
வேறியல்பு ளார்சிலர்தம் வேலியனை யாராய்
நீறிகழ்ப லோருடல்க ணேரினரி நாய்பேய்
பாறிரைய தாகவடு பான்மையுடை யாரே. (எச)

தானதனத் தானதனத் தானதனத் தானா

தேனமர்பொற் பூவினனைச் சிறியிடித் தாள்சேய்
தானவருக் கேமனெனத் தானறிவுற் றோரே
கானம்றப் பாவைமயற் காரனெனக் கூறீ
ரானகணத் தேகளிமிக் காடல்விளைப் பானே. (எரு)

தந்ததன தந்ததன தந்ததன தந்தா

சங்கரன ருந்தவசு தந்தருள்கு ருந்தோ
பங்கமில்சு கந்தருப ரம்பரைம ருந்தோ
கொங்கவிழ்க டம்பலர்கொ ளுஞ்சிறிய குன்றோ
மங்கலரு மென்கனவில் வந்துசெலு மொன்றே. (எசு)

தத்ததன தத்ததன தத்ததன தத்தா

நத்தியப டிக்கொளிரு நற்கடவு ளச்சேய்
மெய்த்திருட னிற்றொழும்வி ருப்பெனுமிக் கீர்
சித்திபெறு கைக்கிளிதி ருப்புகழ்மு தற்பா
முத்திதரும் வித்தெனுமொ ழிப்பொருள்கு றித்தே. (எஎ)

தானதனத் தனனதன தந்ததன தானா

ஆடுமயிற் பரிமுருக னன்பிலமிழ் தூயோர்
பாடுகவிச் சுவையின்மகிழ் பண்புமெளி தாமோ
நாடுமவற் றினையுதவு நம்புநிச மேயாம்
வீடுபெறக் கருதிமிக வெம்பிமெலி வோரே. (எஅ)

தத்ததன தானதன தன்னதன தானா

நத்தையணி வானுதவு நன்மகளிர் சேர்தோண்
முத்தையனை யேதினமு முன்னிமகிழ் சீர்தோய்
த்த்தையுரு வானகவி தன்னையிகழ் தீயோர்
வித்தைவிளை யாடியகல் விண்ணுறினும் வீணே. (எக)

தன்னதன தாத்ததன தய்யதன தாந்தா

பொன்னதனை யீட்டிமகிழ் புல்லரிட நான்போ
யென்னருமை பாழ்த்துமவ ரில்லையென நோந்தீ
தன்னமிவர் வாற்றளெசெ யையனரு ணோர்ந்தா
லுன்னரிய தாய்த்தொலையு மொல்லுமுயர் மாண்பே. (அ௦)

வேறு,

தனன தானனத் தனதன தானன தனனா

பரவைவாயிலுக் கிருவிசையேகிய பானூர்
தாமுனுள்வாக் தகுமுருகோன்வெகு தரநான்
விரதமாயழைத் திடினுமுனோர்கிலன் விதியார்
கரமவாறெனக் கெழுதினுமோவுதல் கடனே. (அக)

தந்ததானனந் தனத்தன தனதன தனனா

அந்தநாளயன் கரத்தொகை வரைவிதி யழிசீர்
கந்தநாயகன் கழற்றுணை தருமெனல் கருதீர்
முந்தவோர்சுகம் படித்தசொ லுணருமின் முறையே
பிந்தநேர்சமன் சமர்த்தொழி லுடனறல் பெறவே. (அஉ)

தானதானன தானன தானன தானா

ஞானநாயக னாமுருகோனரு ளாடா
வானளாவுறு சோதனைசூழ்தர வாடா
வினரேசவு மாழ்குமெனோர்விதி யீரே
யேனலாள்கரு தாமையினால்வர லீதே. (௮௩)

தந்ததந்தனத் தனதனதத்தன தனா

விண்டுவிண்டமெய்ப் புகழ்நலமிக்குறும் விதிர்வேன்
மண்டுதிண்புயச் சரவணன் மட்கவில் வடிவே
கண்டுகொண்டிருப் பதின்முயல்கற்பினர் கருதார்
திண்டிமிண்டுடைச் சமையிகள் செப்புபுன் மொழியே. (௮௪)

தானதாத்தன தனதனதனதன தனா

தேனளாய்த்தினை யிடிதறுசிறுமியை மறவா
ஞானமூர்த்தியை நடமிடுமயிலொடு நனிதேர்
மோனமாட்சிகொண் முனிவர்தமடியரை முகில்சார்
வானநாட்டுறு மகளிருமருவுவர் வலிதே. (௮௫)

தந்ததானனத் தனதனந் தனனதன் னதனா

குஞ்சரானனத் தவுணனுங்குவடுமுன் னறவோர்
தஞ்சமாமயிற் படைதொடும்புகழ்கொள்சண் முகவேள்
செஞ்சரோருகச் சரணநம்பியதிறன் மிகைதோய்
நெஞ்சர்தாண்மலர்த் துகள்சுமந்திடுவதென் னெறியே. (௮௬)

தானதந்தன தனதனதனதனத் தனனா

ஏடலர்ந்தவெண் மலர்மகளெழுகடற் புனலோர்
மாடமென்றுகை வரநுகர்முனிவனொப் பவர்தாம்
வேடமங்கையை விழைபவனுரிமைமிக் குடையார்
பாடலின்சுவை யறிதருதிறல் படைத் தவரே. (௮௭)

தந்ததாத்தன தானனத்தானன தனனா

குன்றில்வேட்டுவர் கூடிடத்தாடிய குகவேண்
மன்றினாப்பணா ளார்நுதற்றீயிடை வருசேய்
கொன்றிடாத்தவர் நாடருட்கோலமெய் தியுமோர்
வென்றிவேற்கொடு வீரரிற்போர்செயல் விதியே. (௮௮)

தத்ததத்தன தானனந்தானன தனத்தா

சற்பமொற்றையின் மீதுநின்றாடிமை தனைப்போல்
பொற்பதைத்தொடு கோனலங்காணுபு பொறிக்கோ
விற்பல்விற்பனர் பேசும்வண்டோய்மயி லிசைச்சேய்
கற்பகப்பிடி மால்கரந்தானதொர் கருத்தே. (௮௯)

தானதானனத் தனதனந்தனதன தனனா

வேலினான்ஃமுதற் பகைதடிந்துயர்தலை மிசையோர்
பீலிசூடிமிக் கெழின் மடந்தையர்நசை பெறலான்
மாலினானடித் துணைவிழைந்தவனென மதியீர்
கோலினீள்விழிக் குமரிசுந்தரிபுணர் குகனே. (௯௰)

வேறு

தந்ததானதத்தத் தந்தத்தனதய்யனு

வஞ்சமாதர் பொய்ச்சொற் கொண்டிற்றுய ரெய்தவோ
வம்பர்வாயில் கட்குட் சென்றெய்த்தற வொல்கவோ
மிஞ்சநோயி டைப்பட் டஞ்சுற்றுட னையவோ
வெம்புதீவி னைக்கட் டொன்றிப்பவ மொல்லவோ
கஞ்சன்மாயன் முக்கட் குன்றூர்த்தவர் வெஃகுநாள்
கந்தநாமம் வைத்துச் செம்பொற்புரு மல்குசே
யஞ்சரோரு கத்துக் குஞ்சற்றுயர் வுள்ளதா
ளன்பின்மூழ்கல் விட்டுப் புண்பட்டதெ னுள்ளமே. (கூக)

தானதான தந்தத் தானத்தன தானனு

ஞானவாழ்வி லொன்றிக் காதற்பிணி மாறினோர்
நாகரீக வின்சொற் பாடற்பகர் நாவலோர்
போனகாதி யுண்கைக் காகப்பொய்சொ லாதபேர்
பூதிபூசு மங்கத் தான்மிக்கவிர் தூய்மையோர்
கானவேட மின்குற் றேவற்புரி சேயவேள்
காமர்நாடு மன்பிற்றேய்வுற்றில ரேனுமே
லானவீர விந்தைக் காரக்கவுமாரர்தா
மார்வமீறு நண்பிற்பேசற்கினி யோர்களே. (கூஉ)

தனனதான தத்தத் தந்தாதன தத்தனு

அனல்குலாவு நெற்றிக் கண்சேர்சிவ னற்றைநா
ளசமதாவ யிற்றுட் சென்றேனையெ ரித்துளான்

வனசவேத னுக்கொக் குங்கீரன்வ னத்திலோர்
மறவன்வீ றுரைத்திட் டெய்ந்தோனருணைக்கணீள்
கனககோபு ரத்திற் சந்தோடமி குத்துவாழ்
கவிஞனுதி யர்ச்செப் புஞ்சீலமெ ரனைச்சொல்வான்
மனதிலாசை வைத்துக் கொண்டேமுரு கப்பிரான்
வசையறுமை யைச்சற் றிங்காமொரொடு ரைப்பதே. (கூ௩)

தத்ததந்த தானத் தானதன தந்தன

சிற்பரன்பொ னூருக் கோராதர மென்றுவாழ்
செட்டியன்பர் வாய்மைப் பாமாலைபு னைந்தசேய்
சற்பமொன்றி லாடற் றீராதசி கண்டியூர்
தற்கியைந்த சீலக் கோலாகல னந்தநாள்
பொற்பனந்த மேவிப் போர்வேளுள மொஞ்சிவீழ்
புத்திமிஞ்சு சாருச் சீர்தானிலை யென்றுவா
டற்பநிந்தை மாறிப்போமாறுரு வங்கொள்வா
னைப்பலன்ப ரோடொப் பாநாடுதல் வம்பரோ. (கூ௪)

தனனதத்த தானந் தானத்தன தானன

சுகமெனச்சொ னமஞ் சேரக்கொடு வாழுமோர்
துரியநிட்டை யாளன் றேகத்தடை யாளமா
முகமதைக்கொ ளாநின் றுன்வெற்றிவை வேலன
முருகனுக்கெ நாளும் பாடற்பகர் தூய்மையோ
டகமலர்க்க ணூடுஞ் சீர்பெற்றுயர் நாதனீ
டருணையிற்கை காலுங் கூடக்சுக மாகின

ணிகரிதற்க தாமென் ருனிர்க்குண நாடலய
நிறையுணர்ச்சி யானன் கோர்மெய்த்தவ சீலரே. (கூரு)

தனனதத்த தத்தத் தந்தத்தன தன்னனு

சருவதத்து வத்திற் கும்பெட்பரு ளுண்மையே
சரவணத்து தித்துக் கஞ்சத்தமர் வண்மைதேர்
பருவமுற்று சித்தத் தன்பர்த்தொகை நண்ணுசீர்
பலவிரித்தி சைச்சொற் சந்தக்கவி பண்ணுவார்
மருமலர்க்க ணைத்துட் டன்கைச்சமர் தன்னினீள்
வறுமையுற்றி ளைத்துப் பங்கப்படின் முன்னைநா
ளருணையிற்கி ளிச்சித் தன்கற்பக மன்னுமூ
ரவர்மதித்து மெச்சச் சென்றிட்டது பொய்ம்மையே.

தானதத்த தந்தத் தனதானன தானனு

வேனிலிற்செய் வென்றிச் சமர்தோய்தரு காமவேண்
மேனிசுட்ட கண்பெற் றருள்சேய்மயன் மீறியோர்
கானிடத்து வஞ்சிக் கொடிபோலுறை வாண்முன்வீழ்
காதன்மிக்க தென்கத் துணிவீரது சேர்பிரான்
வானிலுற்ற திங்கட் பிறைநேர்நுதன் மாதுபால்
வாழுவைத்த தன்றிச் சரிபாதியு மாகிமால்
பாணிகர்த்த வின்சொற் பிடியாகவு நாடலே
பாரமற்றை யுண்கட் டிருவாய்விடல் பாவமே. (கூஎ)

தந்ததத்த தாந்தத் தனனதன தனதன

தென்றல்வெற்பில் வாழ்ந்துற் றுளமாதவ முனிவனுர்
செந்தமிழ்க்கு வாஞ்சைப் படுசீர்திகழ் முருகவேள்
குன்றமுற்று நான்சொற் றணிபாமலர் புனையுநாள்
கொன்றிறைச்சி மாந்திக் களிகூர்பவ ரதுசெயா
ரொன்றனைத்து மாந்தத் துவமோர்பவர் துயர்கொளா
ரொஞ்சலற்ற வீண்பொய்ச் சமையாதிப ருயர்வுறார்
கன்றல்விட்ட மாண்புக் கவுமாரர்கள் பெருகுவார்
கஞ்சநத்து மான்கட் குறுவேதனை தவிருமே. (கூஅ)

தத்ததந்த தாத்தத் தானனதன தானன

வெற்றிதுன்றும் வேற்கைச் சேயேதுணை யாமெனு
மெச்சுசெஞ்சொன் மாட்சிப் பாமாலைகள் யாவுமே
சொற்றிலங்கு நீற்றைப் பூசாதவர் பாவநேர்
துட்டர்நிந்தை கேட்டுப் பேய்போன்மருள் கூருநா
ளெற்றிலங்கை யூர்க்குட் போய்மீள்வகை காணுறு
மொக்கவென்ற மாற்கொப் பாம்வாழ்விடை நீடியோர்
நெற்றியங்கண் மூர்த்திக் கேபோல்பவ னவினோர்
நித்தநம்பும் வீட்டிற் சேர்நாளுள தாகுமே. (கூகூ)

தந்ததான தானந் தந்தத்தன தனதன

எண்கண்வேதன் மோகம் பொங்கப்புணர் கலைமின
ளின்சொலுப நாடும் பண்புற்றவர் முதலினோர்

பண்களாதி தேறுஞ் சிங்கத்திர ளனையரே
பண்டசோதை பாலன் றன்பொற்புயர் மவுலிதோய்
வண்கலாப மாவொன் றஞ்சற்குரு வினையலால்
வந்தியாத வீரந் தங்கப்பெறு மவர்கடாம்
வெண்கௌபீன மாருஞ் சிம்புட்பொரு திறமையோர்
விந்தைகோடி காணுஞ் சந்தக்கவி பொழிவரே. (ா)

வேறு

தானதனத் தனதனனா

வாழ்வுமிகுக் கினுமிடிநோய் வாதைவ லுக்கினுமடவார்
பாழ்மயன்முற்றினுமிகலோர் பாலுடல்சிக்கினுமறவே
னேழ்கடலிற்புனலழலூ டேவளர்வுற்றசைதருமா
வீழ்சமரிட்டுயர்வடிவேல் வீரன்மலர்க்கழல்களையே. (ாக)

தனனதனத் தனதனனா

மதனன்மலர்க்கணைமழையான் மயல்வெறிமிக்கரிவையர்பா
லிதமொழிசொற்றலைபவரா மிழிஞருமெய்க்கதிபெறுமோர்
விதமுமுடிப்பவன்வடிவேல் விகிர்தனெனத்தெரிகிலரே
சதமகன்மெச்சியகிளிதோய் தருபுகழைக்கருதுமினே. (ாஉ)

தானதனத் தானதனா

காதன்மறப்பேதைமுனோர் காமுகனிற்போய்மகிழ்கூர்
நாதன்மலர்த்தாள்களையே நாளுநினைப்பாய்மனமே
யாதரவற்றோரெனவீ ணாகுலமுற்றோறரிதா
மேதமயப்பாருலகோ ரேசமிகக்கூசினையே. (ாங)

தனனதனந் தனதானு

கமலமடந்தையர்தோள்சேர் கடவுளர்கண்டறியாரா
யெமனைமுனிந்துதைவார்பா லிளையமகன்குருவானு
னமலபரம்பரையூடே யதுமுறையென்றலின்வேல்வேள்
சிமயபதந்தொழுநீரார் சிறுவன்மிகும்பெரியோனே. (௭௪)

தானதனந் தனதானு

காலன்வியந்திடுமாறே காதுமுடம்பயில்வார்பான்
ஞாலமிகழ்ந்திடநாய்போ லுளுமலைந்தயர்தீயோர்
வேலவனன்புடையார்நேர் வேடமணிந்துறில்வீணே
போலவிளங்குறும்வாளுள் போமுன்வரும்பயன்மாதோ. ()

தானதனத் தனதானு

ஆறுமுகத்தொருதேவே யாரணவித்தெனவாழ்சீர்
தேறுமியற்புலவீர்காள் சேவலணிக்கொடிதானே
மீறுமெனத்தெரியாதார் வீரமறப்பொருநாளே
நீறுமிகப்புனைமேலோர் நீதிவெளிப்படலாமே. (௭௬)

தத்ததனத் தத்ததனு

கொட்டியபக்கத்தொனிசால் குக்குடம்வைத்துத்தகரூர்
செட்டியைநத்தித்திரிவார் சித்திமுழுக்கப்பெறுவார்
மட்டில்புகழ்ப்பொற்புறுவார் மற்றொருடற்புக்கயரார்
சட்டியினிற்கொக்கடுமோர் சத்தியவர்க்குத்துணையே. (௭௭)

தந்ததனந் தந்ததனா

அண்டர்பயந்தொஞ்சுறநா ளைந்துமுகன்றந்தருள்சேய்
தொண்டரினங்கண்டிகழ்நீர் துன்றுமெனெஞ்சின்றுயர்போய்
மண்டருளின்பங்கடல்போல் வந்துபொருந்தும்படிவேல்
கொண்டவிரன்றென்படுமோ குண்டர்விரும்புங்கலியே. (௯௮)

தானன தானனத் தனனா

நீடருள்வாசனைத்துறவோர் நீயொருதாயெனச்சொலவாழ்
பீடணைவாரினத்துலகோர் பேசவினாலுவப்புறவே
வேடமின்மாலுடைக்குகவேண் மேதகுதாணிணைத்துளநான்
வீடடைவான்மிகத்தளரேன் வேல்வழிபாடுனாற்றுவனே. ()

தானதனந் தத்ததனந் தய்யதனந் தனத்தனனா

பூநலமும் பொற்பணியும் புல்லுமயிற் புயத்தியல்பார்
பாநவிலும் பத்தர்மிகும் பல்கிரியுச் சியிற்றினமே
லாநடனம் பற்றிவிளங் கையனெனக் களித்துளதோர்
தூநகையுங் கற்கிணறுந் தொல்லுலகைத் தெரித்தனவே. ()

முற்றிற்று

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

நூற்பயன்

வெண்பா

நாடறியச் சொன்முருகா னந்த லகிரிநன்னூற்
பாட லொருநூற்றுப் பத்துமே—தேடரிய
செல்வமெனக் கொண்டு தியக்கறுக்குஞ் சித்தருக்கே
கல்வரைதோ ருடுங் கழல்.

வேலுமயிலுந்துணை.

மெய்யடியார் திருவடிகளே சரணம்.

தெய்வமே துணை.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௬௯	௭	பொழி	மொழி
௭௧	௧௨	னந்த	னதந்த
௭௨	௨௦	மன்ம	மன்ப
௭௯	௫	சலிலி	சலிலி
௮௦	௫	யிகழ்க்கி	யிகழ்ச்சி
,,	௨௧	யுணர்வ	யுணர்குவ
௮௪	௭	தனனங்	தன்னங்
௯௫	௨௫	கூடக்சுக	கூடச்சுக
௯௬	௨	நாடலர	நூடலா